MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE
(416) 293 4010
kathir@mahaanspickandpressoilmill.com
www.mahaanspickandpressoilmill.com
5-5635 Finch Ave East,
Scarborough Ontario, Canada MIB5K9
ORGANIC - HEALTHY - TASTY

# தேசம்

NATION THE THESAM

416-333-6115
PLATINUM
PLATINUM CLUB AWARD IN 2023
Leading with Excellence



SALES REPRESENTATIVE
RAJ NADARAJAH
RE/MAX EXCEL

Issue - 08 Once a Month OCTOBER 2024




## யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கம்யூனிச தோழர் அனுப்பி வைத்த குறிப்பு

## திசைகாட்டி சரியான திசையை காட்டத் தொடங்கிவிட்டதா?






## ஈழத்து திரைப்படத்துறையை ஒரு தொழில்த்துறையாக கட்டி எழுப்ப இலங்கையின் புதிய அரசு தீர்மானம்

## ஒன்ராறியோ அரசு 35,000 மாணவர்களுக்கு தொழில் சார்ந்த துறைகளில் கல்வி கற்கும் வாய்ப்பை அறிமுகப்படுத்துகிறது

Ontario

Ministry of Labour, Training and Skills Development

# இனப்பாகுபாடு அற்ற ஒரு இணக்கமான இலங்கைக்குள் அனைத்து மக்களுக்குமாகவும். தமிழ் மக்களின் இதயங்களிலும் நிம்மதி தோன்றவும் வறுமை நீங்கவும் வழி செய்யுங்கள்

## இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கா அவர்களை வாழ்த்தும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம்

"இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் காலத்திற்கு காலம் அமர்ந்திருந்தவர்கள் தங்கள் பதவிகளைத் தக்க வைப்பதற்காக இனவாதத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு அகங்காரத்தோடு நடந்து கொண்ட சகாப்தத்தை இல்லாதொழித்து தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் இலங்கையின் புதிய ஜனாதிபதியாகிய தங்களை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் வாழ்த்துகின்றது. தங்கள் நீண்ட கால கடின உழைப்பு, விடா முயற்சி ஆகியவற்றுக்கு கிடைத்த வெற்றியாகவே நாம் தற்போதைய மாற்றத்தை நாம் கணிக்கின்றோம். எனவே, தங்கள் தோழர்களாகிய ஏனைய அரசியல் சகாக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆதரவோடு இனப்பாகுபாடு அற்ற ஒரு இணக்கமான இலங்கைக்குள் அனைத்து மக்களுக்குமாகவும். தமிழ் மக்களின் இதயங்களிலும் நிம்மதி தோன்றவும் வறுமை நீங்கவும் வழி செய்யுங்கள்.
அதே போன்று ஒரே நாளில் தமிழ் சிங்கள புத்தாண்டை இரு இன மக்களும்கொண்டாடுகின்ற ஒரு அற்புதமான தேசத்தை தங்களிடம் ஒப்படைத்த. தமிழ் சிங்கள இஸ்லாமிய மக்களின் எதிர்காலம் பொற்காலமாக விளங்க தீர்க்கமான முடிவுகளை எடுக்க. எந்த நேரத்திலும் தயங்காதீர்கள்"

இவ்வாறு இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கா அவர்களை வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ள கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.
உலகின் பல நாடுகளிலும் கிளைகளை அமைத்து கடந்த ஐம்பது வருடங்களாக தமிழ்ப் பணியும் தமிழ்ப் பண்பாடு தொடர்பான செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு உலகின் பல நாடுகளிலும் மாநாடுகளை நடத்தியும் தமிழ் மொழியை புலம்பெயர்ந்த நாடுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தகுந்த பயிற்சியை சென்னை எஸ். ஆர். எம் பல்கலைக் கழகத்தோடு இணைந்து நடத்தில் அதில் தகுந்த பயனைப் பெற்றுக் கொடுத்த ஒரு உலக அமைப்பாக விளங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் அவர்களின் இந்த வாழ்த்துச் செய்தி உலகத் தமிழர்களுக்கு உற்சாகத்தைத் தரவல்லது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.
மேற்படி வாழ்த்துச் செய்தியில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்:

இயற்கை வளங்கள் நிறைந்த எழில் மிகுந்த இலங்கையில் தேவையற்ற வகையில் இனப்பாகுபாட்டை ஒரு ஆயுதமாக முன்னைய அரசியல் தலைவர்கள் எடுத்துக் கொண்டதன் விளைவே இங்கு பல முரண்பாடு தோன்றி இறுதியில் தங்கள் அமைப்பினரைப் போன்று எமது தமிழ் இளைஞர்களும் தீவிரப் போராட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டார்கள். மாங்கனியைப் போன்ற ஒரு சிறிய தேசத்தின் அழகும் அமைதியும் கடந்த காலங்களில் சிதைந்து போயிருந்தது. இனிமேலும் இனங்களுக்கு எதிரான அடக்கு முறை அல்லது இனப்பாடுபாடு ஆகியவை இந்த தேசத்தில் தலைவிரித்து ஆடினால் அது எவ்வித நன்மைகளையும் தரப்போவது இல்லை. தங்களை தேர்ந்தெடுத்த மூவின மக்களும் அதையே எதிர்பார்க்கின்றார்கள்.
தங்களுக்கு முன்னாள் உள்ள பணிகளும் கடமைகளும் எவ்வளவு சவால்கள் நிறைந்தன என்பதை நாம் அறிவோம். யதார்த்தத்தை புரிந்து கொள்ளும் அறிவையும் சகிப்புத் தன்மையும் கொண்ட அதிகளவு மக்கள் தங்களை தேர்ந்தெடுத்த காரணமே, இந்த தேசத்தில் பொதுவான ஒரு மாற்றம் தேவை என்பது தான்.
எனவே தங்கள் ஆட்சிக் காலத்திலும், அதனைத் தொடர்ந்து வரும் எதிர்காலத்திலும் இலங்கையில் எவ்வித சந்தேகங்களோ அன்றி முரண்பாடுகளோ இல்லாது தங்களால் முடிந்தளவிற்கு மாற்றங்களைக் கொண்டு வந்து அனைத்து மக்களின் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்கும் நாட்களுக்காக நாம் காத்திருப்போம்.
இதேவேளையில், தமிழ்ப் பண்பாட்டை மேம்படுத்தும் நோக்கம் கொண்ட சர்வதேச அமைப்பு என்ற வகையில் இலங்கையில் அனைத்து மொழிகள் மற்றும் மதங்கள் சார்ந்த செயற்பாடுகளில் சீரான போக்கு கொண்ட திட்டங்களை தாங்கள் கண்டறிந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் நாம் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு கம்யுனிச தோழர் அனுப்பி வைத்த குறிப்பு

50 வருடங்களுக்கு முன்னர் நாம் வாசித்த கவிதையொன்று...
"சுரண்டப்பட்டு வாழ்ந்த நான்
ஒருநாள் வெகுண்டெழுந்தேன்..
அன்று முதல் நான் ஒரு கொம்யுனிஸ்ட் ஆனேன்"

இந்தக் கவிதை ஈழத்தமிழர்களான எமக்கும் பொருந்தும். இந்தக் கவிதையில் உள்ள 'சுரண்டப்பட்டு'
என்பதை 'அடக்கப்பட்டு' என்று மாற்றினால் நாமும் கம்யுனிஸ்ட் ஆக ஒரு மாற்றத்தை எம்மிடத்தில் காண்பதில் தவறேதும் இல்லை.
இலங்கையில் முதற் தடவையாக ஒரு கம்யுனிஸ்ட் நாட்டின் அதிபராகி உள்ளார்.
ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் சிறந்த கல்லூரிகளில் சிறந்த ஆசிரியர்கள் கம்யுனிஸ்ட் ஆக இருந்தார்கள். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் வைத்திலிங்கம் அவர்கள். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கார்த்திகேசு அவர்கள். முள்ளியவளையில் வி. பொன்னம்பலம் அவர்கள். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் 'ஒறேற்றர்' சுப்பிரமணியம் அவர்கள். அவர்கள் தங்கள் மாணவர்களில் பலருக்கு கொம்யுனிய சிந்தனைகளைப் போதித்து அவர்களை நெறிப்படுத்தினார்.
எமது அரசியல் தலைவர்களான அமிர்தலிங்கம். தர்மலிங்கம். ஆலாலசுந்தரம் உட்பட பலர் கம்யுனிச சிந்தனைகளை ஏற்றுக்கொண்டார்கள்.
ஆனால் பாராளுமன்றம் செல்வதற்காக அதிலிருந்து விலகி நின்று தமிழ்த் தேசியத்தை கையில் எடுததார்கள்.
தமிழ்த் தேசியம் பேசுவது கம்யுனிசத்திற்கு விரோதமானது அல்ல. ஆனால் சர்வதேசியம் என்ற பிரிவு தான் கம்யுனிசத்திற்குள் அடக்கமாகியுள்ளது.
இலங்கையின் புதிய அதிபர் அநுர தனது பதவியை ஏற்றுக்கொண்டு கையெழுத்திடுகின்றார். அவர் இலங்கையில் நேர்மையான அரசியல் தலைமையை கையில் எடுக்கின்றார் என நாம் நம்பிக்கை வைப்போம்.
கால மாற்றங்கள் நம் தமிழர்களுக்கும் இஸ்லாமிய சகோதரர்களுக்கும் நன்மை விளைவிப்பதாக இருந்தால் அனைவரும் தேசத்தையும் அதன் அதிபரையும் கொண்டாடி மகிழலாம்.
அது வரை இத்தனை ஆண்டுகளை கடும் துன்பியல் அனுபவங்களாக பொறுத்து கொண்ட நாம் இன்னும் சில வருடங்களை புதிய ஜனாதிபதியிடமும் அவரது அரசிடமும் கையளித்து காத்திருப்போம்.






## தேசம் குரல் – ஒக்டோபர் 2024

Thesam Publishers

தேசம்

தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# ஈழத்து தமிழ்த் திரைப்படத்துறையை ஒரு தொழில்துறையாக கட்டி எழுப்ப தீர்மானித்துள்ள இலங்கையின் புதிய அரசு

ஈழத்து தமிழ்த் திரைப்படத்துறையை, எமது இலங்கைத் தமிழர்கள் மறந்து போய் எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்றிலிருந்து சுமார் 40 தொடக்கம் 50 ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியில் ஈழத்து திரைப்படத்துறை ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியை மெதுவாக எட்டிக் கொண்டிருந்தது என்றால் அதை எம்மவர்களில் எத்தனை பேர் நம்புவார்கள் என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றே.

அந்த நேரத்தில் சிங்களத் திரைத்துறை இன்று போல் ஓங்கி வளர்ந்த ஒன்றாக இருந்தது. அந்த சிங்களைத் திரைப்படத்துறையில் தமிழர்களான பலர் ஒளிப்பதிவு. தொழில்நுட்பம் மற்றும் இயக்கம் போன்ற துறைகளில் முக்கிய பங்கு வகித்தனர் என்பதும் ஒரு வரலாறுதான். அதை விட சினிமாஸ் ஸ்ரூடியோ என்னும் திரைப்படத் தயாரிப்பிற்கான கலைக் கூடத்தை நிறுவி அங்கு தமிழ்ப் படங்களை மாத்திரமல்ல சிங்களப்படங்களும் தயாரிக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது என்பதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும். மேற்படி சினிமாஸ் ஸ்ரூடியோ என்னும் பிரமாண்டமான நிறுவனத்தின் சொந்தக்காரர் திரு குணரத்தினம் என்னும் ஒரு உயர்ந்த தொழிலதிபர் ஆவார். இவ்வாறாக இலங்கையில் திரைப்படத்தறையில் கொடிகட்டிப் பறந்த சில தமிழ் அன்பர்களும் இருந்தார்கள் என்பது எம்மில் பலருக்கு தெரியாமல் போயிற்று என்பதையும் நாம் ஒரு கவலைக்குரிய செய்தியாகவே பார்க்க வேண்டும்.

தற்போது கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக இலங்கையிலிருந்து தமிழ்த் திரைப்படங்கள் எதுவும் தயாராகவில்லை என்பதுதான் உண்மை.

இவ்வாறான காலப்பகுதியில் ஈழத்து சினிமா ரசிகர்களாகிய நாங்கள் அனைவரும் தென்னிந்திய திரைப்படங்களால் 'மூழ்கடிக்கப்பட்டவர்களாக' மாறிவிட்டோம். தமிழ்த் திரைப்படம் என்றால் தென்னிந்தியாவில் தயாராகும் திரைப்படங்களையே நாம் பார்ப்போம் என்று பிடிவாதத்தோடு இருப்பவர்களாகவே நாம் அனைவரும் மாறிவிட்டோம். ஆனால் எமது ஈழத்து தமிழ் திரைப்படத்துறை எத்தனை நல்ல திரைப்படங்களை எமக்கு தந்து நின்றன என்பதை எம்மில் சிலராவது அறிந்து வைத்திருக்கின்றோம் என்பதும் ஒரு 'நல்ல' தகவலே ஆகும். இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த தமிழ்த்திரைப்படம் 1951 இல் வெளியான குசுமலதா என்ற திரைப்படம் என அறியப்படுகின்றது.

அதன் பின்னர் தோட்டக்காரி. வெண்சங்கு. காத்திருப்பேன் உனக்காக. நான் உங்கள் தோழன். வாடைக் காற்று இதயராகம், பாசநிலா. டாக்சி ட்றைவர். நிர்மலா. மஞ்சள் குங்குமம். குத்துவிளக்கு, போன்றவை 'நல்ல' திரைப்படங்கள் என்ற பெயரைத் தட்டிச் சென்றன. அவற்றுள் காத்திருப்பேன் உனக்காக என்னும் திரைப்படத்தை போன்ற ஒரு நல்ல திரைப்படம், அதில் பங்கேற்ற நடிக நடிகைகள் மற்றும் உப நடிகர்கள் எமது ஈழத்து தமிழ் திரைப்படத் துறையின் பொக்கிசங்களாகவே விளங்கினார்கள் என்பதையும் நாம் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

இவ்வாறு பல திரைப்படங்களை எமக்குத் தந்த ஈழத்து திரைப்படத்துறையை நாம் மறந்திருந்தோம். நாம் கடந்த 60 வருடங்களாக பாராளுமன்றத்திற்கு வாக்களித்து அனுப்பிய எந்தவொரு தமிழ் பேசும் அரசியல்வாதி கூட ஈழத்து தமிழ்த்திரைப்படத்துறை தொடர்பாக பாராளுமன்றத்தில் ஒரு வார்த்தை கூட பேசியதாக தகவல்கள் இல்லை.

ஆனால் தற்போது இலங்கையில் அநுர குமார திசநாயக்க அவர்களை ஜனாதிபதியாகக் கொண்டு இயங்கிவரும் புதிய அரசின் புத்தசாசனம், மத அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஈழத்து தமிழ்த் திரைப்படத்துறைக்கு 'புத்துயிர்' அளிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளமை. இன்றும் ஈழத்து திரைப்படத்துறையை நேசிக்கின்ற எம்போன்றவர்களுக்கு உற்சாகத்தை தருகின்றது என்பதை நாம் இங்கு பதிவு செய்ய விரும்புகின்றோம். அவர் மேலும் தெரிவிக்கையில் ஈழத்து தமிழ்த்திரைப்படத்துறையை ஒரு தொழில்துறையாக கட்டி எழுப்ப தீர்மானித்துள்ள இலங்கையின் புதிய அரசு எதிர்காலத்தில் தமிழ் சினிமாவை இந்த நாட்டில் ஒரு தொழில்துறையாக வளர்ச்சியடைய செய்ய வேண்டும் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் இளைஞர்களும் வளர்ந்தோறும் திரைப்படத் தயாரிப்புத் துறையில் தம்மை அர்ப்பணித்து தம்மாமல் இயன்ற அளவிற்கு சிறந்த திரைப்படங்களை தயாரித்து இலங்கையில் மாத்திரமல்ல தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் திரையிடுகின்றார்கள். இதே போன்று ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் திரைப்படங்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு இருக்கையில் இலங்கையில் அரசு சார்ந்த ஆதரவு தமிழ்த்திரைப்படத்துறைக்கு இருக்கும் பட்சத்தில் மிகுந்த ஆர்வத்தோடு உள்ளவர்களின் தயாரிப்புக்களை இலங்கையில் திரையிடும் வாய்ப்பும் கிட்டும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம்.

எமது கலைஞர்களும் எமது முதலீடுகளும் ஈழத்து தமிழர்களாலும் சிறந்த திரைப்படங்களை தயாரிக்க முடியும் என்ற உண்மையை வெளியுலகிற்கு காட்டும் ஒரு பொற்காலம் உருவாகிவிட்டது என்றே நாம் எதிர்பார்க்கலாம்.

# மணப்பெண் அலங்காரத்தில் சர்வதேச நாடுகளை தோற்கடித்து மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்ட யாழ்ப்பாணப் பெண்மணி அனித்தா!

மணப்பெண் அலங்காரத்தில் சர்வதேச நாடுகளை தோற்கடித்து மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்ட யாழ். பெண்மணி!

இன்றையதினம் கம்போடியாவில் நடைபெற்ற மணப்பெண் அலங்கார போட்டியில் 19 நாடுகளுடன் போட்டியிட்டு, யாழ்ப்பாணத்தை சேர்ந்த அனித்தா விநயகாந்தன் அவர்கள் மூன்றாவது இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார். யீஉஊயு ஊயஅடிழனயை உயசை , ஆயமந ரி ரூ டீநயரவல முடலஅிறைஉள 2024 போட்டிகள் வருடாவருடம் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறுவது வழமை. அந்தவகையில் இந்த போட்டியானது இந்த வருடம் கம்போடியாவில் நடைபெற்றது. எல்லாமாக 19 நாடுகளை சேர்ந்த போட்டியாளர்கள் பங்கு பற்றினார்கள். அந்த வகையில் இலங்கையைச் சேர்ந்த 7 போட்டியாளர்கள் பங்கு பற்றினார்கள்.அங்கு நடைபெற்ற மணப்பெண் அலங்காரப் போட்டியில் இலங்கை - யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையைச் சேர்ந்த அனித்தா விநயகாந்தன் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவ்வாறு வெற்றியீட்டிய பெண்மணிக்கு பலரும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# திசைகாட்டி சரியான திசையை காட்டத் தொடங்கிவிட்டதா?

பேராசிரியர் கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

ஊழல் செய்தவர்களின் பெயர்ப்பட்டியல் விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அதில் உள்ளவர்கள் வெளியேறாதவாறு திருப்பியனுப்பப் படுகின்றனர்

ஏ கே டி என்று அழைக்கபடும் அனுர குமார திசாநாயக்க இலங்கையின் ஒன்பதாவது ஜனாதியாக மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார்.

இந்தத்தேர்தல் ஒரு மும்முனைத் தேர்தலாக இருக்கும் எனப் பலர் சொன்னபோதும் அது ஒரு இரு முனைத்தேர்தலாகவே இருந்தது.

தான் மட்டும் தான் விழுந்த பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திய வீரன், ஆபத்பாந்தவன், தான் இல்லாவிட்டால் பொருளாதாரம் வீழ்ந்து விடும் என்றெல்லாம் பயமுறுத்திய இலங்கையின் மக்களால் ஏற்கெனவே பல தேர்தல்களில் தோற்கடிக்கபட்டு, தன்னுடைய கட்சியையே கட்டிக்காக்க முடியாமல் சீரழித்து, கடந்த தேர்தலிலும் மக்களால் நிராகரிக்கபட்டு தேசியப்பட்டியலில் கிடைத்த ஒரு ஆசனத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தில் நுழைந்து, இலங்கை அரசியலமைப்பின் பலவீனம் காரணமாக ஜனாதிபதியாக மாறிய கிழட்டு நரியைத் தென்பகுதி வாக்களர்கள் இந்தத்தேர்தலிலும் கண்டுகொள்ளவே இல்லை.

ஆகவே அனுரவுக்கும் சஜித்திற்கும் இடையிலான ஒரு போட்டித் தேர்தலாகவே இது நடைமுறையில் அமைந்தது. அதிலும் சஜித்தையும் தென்பகுதி வாக்களர்கள் பெருமளவுக்கு ஓரம்கட்டியிருந்தனர். வடக்கு- கிழக்கு மற்றும் மலையகப்பகுதிகளிலேயே அவருக்கு அதிகப்படியான வாக்குகள் கிடைத்தன.

அதாவது, நாட்டிலுள்ள அனைத்து சிறுபான்மை மக்களும் சஜித் பிரேமதாச பக்கமே நின்றனர் என்பது மிகவும் தெளிவாகியுள்ளது. அதுமட்டுமின்றி சிங்கள பெரும்பான்மை வாக்காளர்கள் ஒரு பக்கமும், இதர தமிழ் முஸ்லிம் வாக்காளர்கள் ஒருபக்கமும் இருப்பதை இந்த தேர்தல் மீண்டும் நிலைநிறுத்தியது. மக்கள் துருவப்பட்டுள்ளனர் என்பதது மேலும் நிரூபணமாகியுள்ளது.

இப்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாத்தில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் ஆணையில்லாத ஒரு பாராளுமன்றத்தைத் தொடர முடியாதென தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். எனவே ஒன்றன் பின்னர் ஒன்றாக இலங்கை இரு தேர்தல்களை சந்திக்கிறது

இனிமேல் தேர்தலில் நிற்க மாட்டேன் தேசியப்பட்டியலிலும் பாராளுமன்றம் வரமாட்டேன் என்று பதவி விலகிச் சென்ற போது ரணில் சொல்லிச் சென்றது பலருக்கு ஆச்சரியமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் 16 தடவைகளுக்கும் மேலாக அவரை மக்கள் நிராகரித்த போது இந்தத் தீரமானத்தை அவர் முன்னரே எடுத்திருந்தால் அவரது கட்சியும் காப்பாற்றப்பட்டிருக்கும் இந்தத்தேர்தல் முடிவுகள் கட்சிக்கு சாதகமாகவும் இருந்திருக்கும்.

பதவியில் இருந்த போது அவர் விடுத்த சவுடால் பேச்சுகள் இப்போது அவரை ஒரு அரசியல் கோமாளியாகக் காட்டுகிறது. ஆனாலும் அவரைப் போற்றிப் புகழ்பவர்கள் இன்னும் இல்லாமல் இல்லை.

புதவிக்கு வந்தபின் ஏற்கெனவே முடிவு செய்தபடி அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதன் பின்னர் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். இந்தத் தெரிவுகளில் யாரும் குறை சொல்லுமளவுக்கு இல்லை. ஒரு தமிழருக்கும் ஒரு முஸ்லிம் நபருக்கும் அமைச்சுச் செயலாளர் பொறுப்புகள் வழங்கப்பட்டன.

நிதியமைச்சின் செயலாளரும் மத்தியவங்கி ஆளுநரும் மாற்றப்படவில்லை. இது ஒரு விவேகமான அணுகுமுறை. நிதியமைச்சின் செயலாளர் ஒரு அரசியல் அடிவருடியல்ல. மத்திய வங்கி ஆளுநர் குறித்த தீவிர விமர்சனங்கள் உள்ளபோதிலும் இப்போதைக்கு விட்டு வைத்துள்ளது போலத் தெரிகிறது. அத்துடன் நிதியமைச்சில் உள்ள கலாநிதிப்பட்டம் பெற்ற ஒருவர் தான் ஐஎம் எப் உடனான பேச்சு வார்த்தைகளின் போது மிகக்கடுமையான நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக உள்வீட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

இது போன்ற அதிகாரிகள் குறித்தும் உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் மாகாண ஆளுநர்கள் ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து அப்பதவிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிலும் தமிழர் ஒருவர் உள்ளார். இவை குறித்தும் ஆட்சேபனைகள் இல்லை. எல்லா நியமனங்களுக்குரிய நபர்களையும் வெகு கவனமாகத் தெரிவு செய்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இவர்களிலே பல்கலைக்கழகங்களிலே இருந்தவர்கள் அதிகமானோர் உள்ளனர்.

அதேவேளை ஏற்கெனவே பல்கலைக்கழகங்களிலே முன்னைய ஆட்சியாளர்களின் நன்மைதிப்பைப் பெற்று உபவேந்தர் பதவிகளிலே உள்ளவர்கள் அனுர குமாரவின் துதிபாட ஆரம்பித்துள்ளனர். கொழும்பை மையமாகக் கொண்ட ஒரு பல்கலைக்கழக உபவேந்தரினதும் வடபுல பல்கலைக்கழகமொன்றின் உபவேந்தரினதும் முகநூல் பதிவுகளையும் காணும் போது இவர்கள் எவ்வளவு பெரிய பச்சோந்திகள் என்பது தெரிகிறது. இது போன்ற பச்சோந்திகளை சரியாக இனங்கண்டு வேலியிலேயே விட்டுவிட வேண்டும்.

அதிரடி நடவடிக்கையாக அமைச்சுகளுக்குச் சொந்தமான வாகனங்களை காலிமுகத்திடலில் கொண்டுவந்து நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டது. அவை மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பொது மக்களின் வரிப்பணம் கடந்த காலத்தில் எவ்வாறு வீணடிக்கப்பட்டது என்பதை புதிய ஆட்சியாளர்கள் காட்ட முனைகின்றனர்.

ஜனாதிபதியாக நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அனுர குமார தொடர்ச்சியாக பரப்புரைகளின் போது தான் குறிப்பிட்டு வந்த விடயங்களை மீள வலியுறுத்தினார். பல்லினத் தன்மைவாய்ந்த நாடு சட்டவாட்சி சட்டத்தின் முன் அனைவரும் சமம் போன்றவற்றை வலியுறுத்திய அவர் தமக்கு வாக்களிக்காதவர்களையும் இணைத்துக் கொண்டு பயனிக்கத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். பதவியேற்பின் போதும் அதன் பின்னரும் அவரது நடத்தை மற்றும் எடுக்கப்பட்டு வரும் அதிரடி நடவடிக்கைகள் முதல்வன் திரைப்படத்தில் வருவது போன்று சுவாரசியமாக உள்ளதாக பலரும் குறிப்பிடுகின்றனர்.

கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்களின் பேர்ப்பட்டியல் விமான நிவைலயத்திற்கு அனுப்பப்பட்டு அதில் உள்ளவர்கள் வெளியேறாதவாறு திருப்பியனுப்பப் படுகின்றனர். இன்னுமொரு அதிரடியாக ஈஸ்டர் குண்டுவெடிப்பு தாக்குதல்கள் பற்றிய விபரங்கள் ஊடகங்கள் வாயிலாக பொது மக்கள் அறியுமாறு பரப்பப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் தென்பகுதி மக்கள் மத்தியில் மட்டுமன்றி வடக்கு கிழக்குப்பகுதிகளிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. மக்கள் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளை பாராட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவுத்தளம் விரிவடைவதற்கான சமிக்ஞைகள் தெளிவாகத் தென்படுகின்றன. மக்கள் மனதில் இலகுவாகத் தைக்கவல்ல பிரசார உத்திகள் எதிர்வரும் தேர்தலில் பயன்படுத்தப்படும். இனவாதம் மதவாதம் உறவினர் கவனிப்பு ஊழல் இலஞ்சம் என்று ஊறிப்போன அரசியல் கலாசாரத்தில் மக்கள் விரும்புகின்ற மாற்றங்கள் கண்ணெதிரே ஏற்படும் போது மக்கள் புருவத்தை உயர்த்துகின்றனர். மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டும் வைத்துக் கொண்டு என்ன சாதிக்க முடியும் என்று ஏளனம் செய்தவர்கள் இன்று அவர்களின் அதிரடி நடவடிக்கைகளை பீதியுடன் அண்ணாந்து பார்க்க வேண்டியுள்ளது. தமது வழமையான அரசியல் வியூகங்கள் எடுபடாது என்பது புரியத் தொடங்கியிருக்கிறது.

எனவே தான் மொட்டுக்கட்சி தமது கட்சியில் ஊழல்வாதிகளுக்கு இடமில்லை எனக் கூறுகிறது. இது இந்த நூற்றாண்டின் வெகு சிறந்த நகைச்சுவையாக இருக்கும். அமெரிக்காவுக்கு அவசர அவசரமாக பறந்த காக்கா என்று அழைக்கப்படும் மொட்டுக்கட்சியின் தாபகருக்கு மிஸ்டர் டென் பேர்சன்ட் என்று ஏன் பேர்வந்தது என்பதை அக்கட்சியினருக்கு நினைவிருக்கிறதா? அப்படியானால் அவர்தான் முதலில் தூ க்கப்பட வேண்டியவர்.

இப்போது யுஎன்பியும் சஜித்தின் கட்சியும் இணையுமா என்று பலர் எதிர்பார்க்கின்றனர். அவை இரண்டும் இணைந்தால் வெற்றி பெறலாம் என்பது அவர்கள் எண்ணம். ஆனால் ஒரு போதும் இணையமாட்டேன் என்று சஜித் முறுக்குகிறார். அவரிடமுள்ள ஏனையோர் அதே முறுக்கு முறுக்குவார்கள் என்று சொல்ல முடியாது. எனவே ஒரு கூட்டணி அமைவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு.

தலைவர்கள் யாருக்கு குத்தச் சொல்கிறார்களோ அவர்களுக்க வாக்குக் குத்திப் பழக்கப்பட்ட மலையக மக்களும் இனி சற்றே சிந்திக்க வாய்ப்புண்டு. பேரம் பேசும் அரசியலுக்கு பழக்கபட்ட மலையக அரசியல் வாதிகளுடன் அனுர கதைத்திருக்க வாய்ப்புள்ளது. மலையக மக்கள் தொடர்பில் அனுரகூறிய விடயங்கள் பற்றிய ஒரு வீடியோ சமூகவலைத்தளங்களில் உலாவருகிறது. மலைவயக அரசியல் வாதிகளே கண்டுகொள்ளாத மக்கள் பிரச்சினைகளை அந்த மக்களின் அவலங்களை அனுர சொல்கிறார். அவற்றுக்குத் தீர்வு காண்பேன் என்கிறார். இதய சுத்தியோடு இந்தப்பிரச்சினை அணுகப்படு:மாயின் மலையகப்பகுதி வாக்குகள் அனுரவுக்கு கிடைக்கும்.

அனுர வந்தால் வடபகுதி மக்களுக்கு ஆபத்து அதனால் ரணிலுக்குப் போடுங்கோ சஜித்துக்குப் போடுங்கோ என்றார்கள். திலீபனின் உருவம் தாங்கிய ஊர்தி வடக்கில் பல இடங்களுக்கும் போய்வந்தது. யாரும் தடுத்ததாகத் தெரியவில்லை. முன்னர் நல்லூரில் உள்ள நினைவிடத்தில் விளக்கேற்றக் கூட அனுமதியில்லையே?

தேசிய மக்கள் சக்தி பற்றி வடபுலத்தில் உருவாக்கப்பட்ட பிம்பம் படிப்படியாக அறுபட ஆரம்பித்துள்ளது. எதிர்வரும் பொதுத்தேர்தலில் அங்கும் பேசிப்பேசியே வயது முதிர்ந்து போன அரசியல் வாதிகளை ஓரம் கட்டி புதிய முகங்கள் களத்திற்கு வரும் என நம்பலாம். தேர்தல் செலவுகள் குறித்த கடுமையான கட்டுப்பாடுகள் ஒரு சாதாரண குடிமகனும் தேர்தலில் போட்டியிடும் ஒரு சூழலை உருவாக்கும்.

இனவாத அரசியலை புறந்தள்ளி தெற்கிலே எடுக்கப்படும் காத்திரமான நடவடிக்கைகள் புதிய வாக்காளர் மத்தியிலே மிகவும் கவர்ச்சிகரமாக உள்ளமை சமூக ஊடகப்பயன்பாட்டின் மூலம் வெளிப்படுகிறது. இதனால் வடக்கிலே உள்ள அரசியல்வாதிகளும் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

ஒரு நாட்டின் சிந்தனைப் போக்கையே ஒரு தலைவனின் முன்னுதாரணத்தினால் மாற்ற முடியும் என்பதை நடைமுறையில் காணமுடிகிறது. இது எவ்வளவு காலத்திற்கு என்று ஒரு சிலர் முணுமுணுப்பதும் காதில் கேட்கிறது. மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சி மிகப்பெரிய ஒரு சாதனையை செய்திருக்கிறது. அது மற்றைய ஆட்சியாளர் மீது மக்கள் கொண்ட கோபத்தின் வெளிப்பாடு என்று எடுத்துக் கொண்டாலுங்கூட அடுத்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் மக்கள் ஆதரவைப் பெருகச் செய்திருக்கிறது.

அத்தகைய மக்கள் ஆதரவை சரியான முறையில் பயன்படுத்தி மக்களுக்கு நன்மைசெய்தால் தேசிய மக்கள் சக்தி அடுத்துவரும் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெறலாம். தேசிய மக்கள் சக்தி கிடைத்த இந்த வாய்ப்பபை சரியாகப் பயன்படுத்தும் என்றே தோன்றுகிறது. தமிழர் தரப்பு மாறிவரும் இந்த சூழலை என்னவாறு கையாளப் போகிறது என்பதை இப்போது எதிர்வு கூற இயலவில்லை. பழைய பல்லவியை இனியும் பாடுவதா அது எடுபடுமா என்பதை சிந்திக்க வேண்டும். இளைய சமூகத்தின் தேவைகள் என்ன? அவர்களது அபிலாசைகள் என்ன?, வடக்கில் ஏற்கெனவே ஒரு பாராளுமன்ற ஆசனம் மக்கள் தொகை குறைந்ததனால் பறிபோய்விட்டது. இந்நிலையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இந்த மாற்றங்கள் குறித்து என்ன கூறுகிறார்கள் என்பதை இளைய சமூகத்தின் குரலாகக் கருதி செயற்படுவது நலம்.



தேசம் பத்திரிக்கையில்
விளம்பரம் செய்ய அழையுங்கள்
647-891-7725

# இலங்கையின் இரண்டாவது பெண் பிரதமராக அமர்ந்து ஊழலற்ற அரசாங்கத்தை தலைமை தாங்கவுள்ள பல்கலைக் கழக விரிவுரையாளர் ஹரினி அமரசூரிய

உலகிற்கு முதலாவது பிரதமரைத் தந்தது இலங்கை என்னும் மாங்கனித் தீவு. ஆனால் அந்த மாங்கனியைக் கடித்துக் குதறி இனவாத சாயம் பூசி சீரழித்து சின்னாப்பின்னமாக்கி பல ஆண்டுகளுக்கு பின்னர் மாங்கனித்தீவின் பிரதமராக பதவியேற்கவுள்ளார், பல்கலைக் கழக விரிவுரையாளர் ஹரினி அமரசூரிய அவர்கள்.

தோழர் அநுர குமார அவர்களின் பதவியேற்பு அறிவிக்கப்பட்ட பின்னர் புதிய பிரதமரின் தலைமையில் அமைச்சரவையும் புதிய முகங்களோடு இலங்கையின் வளர்ச்சிக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையில் நாம் அனைவரும் இணைந்து வாழ்த்த வேண்டும்.

இந்த நேரம் வரை அநுர அவர்கள் சஜித் அவர்களைவிட 12 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றுள்ளார்.

இதன் மூலம் அநுர அவர்களின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட எண்ணும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அநுரவின் இந்த புது ஆட்சியில், பிரதமராக பதவியேற்கவுள்ள பெண்மணி பல்கலைக்கழக விரிவுரையாளர் ஹரினி அமரசூரிய அவர்கள்.
இவர்,

இலங்கையின் கல்வியாளர்,

அரசியல் சமூக செயற்பாட்டாளர்,

பல்கலைக்கழக விரிவுரையாளர் மற்றும்

அரசியல்வாதி ஆவார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான ஹரிணி அமரசூரிய இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார்.

54 வயதுடைய இவர் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் கற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.
மீண்டும் இலங்கையில் அமையப்போகும் புதிய அரசிற்கு எமது வாழ்த்துக்கள்



# எமது சித்தாந்தம் கடந்து இவ்விதமான சீர்திருத்த முறைமை மாற்றத்திற்காக உங்கள் தெரிவை வரவேற்கிறோம்... வாழ்த்துகிறோம்.

## ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க வுக்கு சென்ற அவசர கடிதம்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்த நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. பகைமையை பகைமையால் தணிக்க முடியாது. பகைமையை அன்பால் தணிக்க முடியும் என்னும் புத்தரின் போதனையை நிலை நிறுத்துங்கள் என ஜனாதிபதி அனுர குமார திசா நாயக்கவுக்கு தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் குறித்து தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் புதன்கிழமை(25-09-2024 ) ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,,,,

இனத்துவ சமூக கட்டமைப்புக்குள் விரிசலை ஏற்படுத்தியது. மதவாதம், இனவாதம் தேசியவாதத்திற்கு எதிரானது தேசியவாதம் என்பது தேசிய இனங்களின் சுயநிர்ணய சமத்துவ இருப்பியலை கேள்விக்கு உட் படுத்தாது. சமநீதிக்குட்பட்டதே இடதுசாரி கோட்பாடு இதை நடைமுறைப்படுத்த வேண்டும். என்பதே நீதி மறுக்கப்பட்டவர்களின் அற நிலை எதிர்பார்ப்பு ஆகும்.

துப்பாக்கி முனையில் இருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது எனும் மாக்சிச கோட்பாட்டிற்கு ஆகப் பிந்திய உதாரணம் தாங்கள் ஏழு தசாப்தம் கடந்த இன முரண்பாட்டிற்கு தங்கள் காலத்தில் என்றாலும் தீர்வு காணப்படுவது அவசியம். அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட இனத்தின் ஏதிலி நிலையின் வலி என்ன என்பதை தாங்களும் உணர்ந்தவர் என்பதால் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றோம்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்த நாட்டில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. பகைமையை பகைமையால் தணிக்க முடியாது. பகைமையை அன்பால் தணிக்க முடியும் என்னும் புத்தரின் போதனையை நிலை நிறுத்துங்கள். எவருக்கும் தீங்கற்ற பஞ்சசீல தம்மபதக் கொள்கை வழியை நடைமுறைப் படுத்தினாலேயே இந்த நாட்டில் சமத்துவம் ஏற்படும்
தமிழர்கள் நல்லிணக்கத்தையே விரும்புகிறோம். அடிப்படை வாழ்வுரிமை இருப்பில் பங்கம் நேருவதால் தான் மனக்கிலேசம் ஏற்படுகிறது சிங்கள மக்களை நாங்கள் எதிர்க்கவில்லை அவர்கள் எமக்கு எதிரிகளும் இல்லை சிங்கள அரசியல்வாதிகளின் தவறான மேட்டிமை வாத அடிமைத்துவ சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படுத்தும் இனத்துவ அடக்கு முறையை யே நாம் எதிர்க்கிறோம்.

எமது நீதி பூர்வமான கோரிக்கையை இதுவரை எந்த ஆட்சியாளரும் புரிந்து கொண்டதாக வரலாறு இல்லை என்பதே வேதனைக்குரிய கசப்பான உண்மை. ஆகவே பாதிக்கப்பட்ட தரப்புடன் இதயசுத்தியாக மனம் திறந்து பூச்சிய நிலையில் இருந்து பேசுங்கள் நீதி என்பது பாதிக்கப்பட்டவனின் பக்கம் நிற்பதே முதலாளித்துவ அதிகார வர்க்கத்துக்கு எதிரான பொதுவுடமை சித் தாந்தத்தை அடிப்படையாக கொண்டு தாங்கள் வேண்டும்.
.
தங்கள் கட்சியை கூட சிங்கள மக்கள் மன்னித்ததால் தான் நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர முடிந்திருக்கிறது. உங்கள் கடந்த காலத்தையும் நீங்கள் மீள்பார்வை செய்வது இன நல்லிணக்கத்திற்கு அவசியமாகும். அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த எந்த எல்லைக்கும் போகலாம். இதுதான் ஜனநாயகத்தின் உயர்ந்த நிலை எனவே வாக்களிக்காதவருக்கும் வாய்ப்பளித்து வெற்றி கொள்வதே ஜனநாயக மரபியல் தத்துவமாகும் அதை நடைமுறைப் படுத்துவீர்கள் என நம்புகின்றோம். எதிர்பார்க்கின்றோம்.

நவீனஇலங்கையைஉருவாக்கமுற்போக்குசிந்தனையுடன் நகருங்கள் முறைமை மாற்றத்தை ஏற்படுத்துங்கள், புதிய அரசியலமைப்பை உருவாக்கங்கள், விவசாய, கடற்றொழில் புரட்சியை ஏற்படுத்துங்கள். கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள். தற்போதைய அரசு இயந்திரம் முழுமையான ஊழலுக்குள் சிக்கித் தவிக்கிறது. தயவு தாட்சண்யமின்றி ஊழல்வாதிகளுக்கு நடவடிக்கை எடுங்கள். போதைப்பொருளை முற்றாக ஒழியுங்கள், வினைத்திறனற்ற பல இலட்சம் அரச ஊழியர்களை அகற்றுங்கள் ,காவல் துறையை முழுமையாக மறுசீர் அமையுங்கள்.
உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுங்கள். வருமானத்தை மீறி சொத்து சேர்ந்தவர்களுக்கு நடவடிக்கை எடுங்கள். சொத்துக்களை அரசுடமை யாக்குங்கள் அரசின் அர்த்தமற்ற செலவினங்களை குறையுங்கள். வருமான வரி திணைக்களத்தை வினைத்திறனுடன் இயங்க நடவடிக்கை எடுங்கள் ஊழலை கட்டுப்படுத்த வலிமையான சட்டமும் கடுமையான தண்டனையும் வழங்க வேண்டும்.

தற்போது நாட்டில் உள்ள ஊழல்வாதிகளை கைது செய்தால் புதிதாக சிறைச்சாலைகளை அமைக்க வேண்டி வரலாம். அவ்வளவு ஊழல்வாதிகள் உள்ளனர். ஊழல் இல்லாத திணைக்களம் இந்த நாட்டில் இல்லை கடந்த காலத்தில் அரசியல் சூதாட்டத்திலும் ஊழலிலும் ஈடுபட்ட எந்த அரசியல்வாதிகளையும் உங்கள் அரசில் சேர்த்துக் கொள்ளாதீர்கள.

எமது சித்தாந்தம் கடந்து இவ்விதமான சீர்திருத்த முறைமை மாற்றத்திற்காக உங்கள் தெரிவை வரவேற்கிறோம்... வாழ்த்துகிறோம்.

மனித சிந்தனை தோற்றுவித்திருக்கும் யாவற்றையும் மறு பரிசீலனை செய் விமர்சனத்துக்கு உட்படுத்து மாற்றி அமை செயல்படு எனும் மாக்ஸ்சிச சித்தாந்தத்தை நடைமுறை படுத்துங்கள்.

மதச்சார்பற்ற தேசத்தை உருவாக்கி சமூக நீதியை நிலைநாட்டுங்கள். வடகிழக்கிலுள்ள அத்தியாவசிய நிரந்தர பிரச்சனையில் பௌத்த தேசியவாதம் கடந்து அவர்களும் மனிதர்கள் அவர்களுக்கும் உணர்திறனும் வாழ்வியல் உரிமையும் உண்டு என்பதை உணர்ந்து உளத்தூய்மையுடன் செயலாற்றுங்கள் வரலாறு உங்களை பதிவு செய்யும் இல்லையேல் காலம் உங்களை காலாவதி ஆக்கி விடும் என்பது தங்களுக்கு புரியாமல் இல்லை.என குறிப்பிடப்பட்டுள்ளது.



### 'அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் பற்றியது

# பத்து ஆண்டுகளுக்கு முன்னர் விண்ணுலகை அடைந்திட்டாலும் இன்றும் பக்கத்தில் அமர்ந்திருப்பது போன்ற உணர்வோடு...

த.சிவபாலு

கனடாவில் கல்வி அமைச்சின்கீழ் பல்கலாச்சார அலுவலராகப் பணியாற்றிய அவர் பின்னர் தன்னை ஒரு எழுத்தாளராவே மாற்றிக்கொண்டு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவுஸ்த்ரேலியாவில் பல்கலைக் கழக பேராசிரியராகப் பணியாற்றும் ஆசி. கந்தராசா அவர்கள் 'நல்ல கருத்துக்களைக் கதையாக்கிச் சொல்வதன் வலிமை' பற்றி இன்று நிறையவே பேசப்படுகிறது. பள்ளியில் படித்ததற்கு மேலாக பாட்டியின் கதைகள் மூலம் நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொண்ட ஆழ்ந்த விழுமியங்கள் ஏராளம். . . . . தனிநபரின் அடையாளத்தினை உருவகப்படுத்தவும் தொடர்பாடலை இலகுவாக்கவும் கதைகூறல் பயன்படுகிறது. இந்த யுக்தியை நாம் ஆசிரியர் எவ்வாறு இந்நூலில் கையாண்டிருக்கிறார் என்பதை உற்றுத் தெரிந்தோமேயானால் நாமும் நமது அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் பயனடையலாமென்பது இங்கு நோக்குதற்குரியது.' என்று அவர் அதிபர் எழுதிய 'மனம் எங்கே போகிறது' நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



திறவுகோல் நூலுக்கு அவர் எழுதிய மதிப்புரையில் 'மானுடம் சார்ந்த வாழ்க்கை மயக்கங்களை பிரயோக விஞ்ஞான வழிகாட்டுதல்கள் எவ்வாறு அகற்றுகின்றன? அறிவியல் உண்மைகள் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதில் என்ன பங்களிப்புச் செய்கின்றன? இவ்வாறு எழும் கேள்விகளுக்கு திரு.கனகசபாபதி அவர்கள் இலகு தமிழில் சுவையாக விளக்கம் தந்துள்ளார் என்கிற நிறைவே இந்நூலினை வாசித்து முடித்ததும் எனக்குப் பட்டது' என எழுதியிருப்பதில் இருந்து பொ.க.வின் ஆளுமை புலப்படுகின்றது.

அவரது 'திறவுகோல்' நூலுக்குப் பதிப்புரைதரப் புகுந்த வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் 'அவரது நகைச்சுவை ததும்பும் எழுத்துக்கள் விஞ்ஞானக் கட்டுரைகளில் உள்ள இயல்பான இறுக்கத்தைத் தவிர்த்து பல்தரப்பட்ட வாசகர்களையும் ஒருமுகப்படுத்தியது' என்று அவரின் எழுத்தாற்றல் பற்றியும் வாசகர்களை வசிகரிக்கும் தன்மைபற்றியும் குறிப்பிட்டுள்ளார். கோகிலா மகேந்திரன் அதிபரின் மாணவியருள் ஒருவர். அவர் தெல்லிப்பளை கலை இலக்கியக்களத்தின் செயலாளராக இருக்கின்றார். அந்த இலக்கியக் களத்தின் மூலம் அதிபர் பொ.கவின் மாறன் மணிக்கதைகள் பாகம் 2, 'மனம் எங்கே போகிறது' இரண்டையும் நூலுருவாக்கி வெளியே கொண்டு வந்திருக்கின்றார். அவர் தனது வெளியீட்டுரையில் 'அந்தக் காலம முதல் இந்தக்காலம் வரை அவருள் இருந்து இயல்பாக வெளிவரும் நகைச்சுவை உணர்வு, இத்தொகுதியில் விஞ்ஞான, உளவியல் உண்மைகளோடு கலந்து வரும்போது அற்புதமாக இருக்கிறது.' என்று குறிப்பிட்டு அதிபரின் எழுத்தாற்றலை வெளிப்படுத்துகின்றார்.

'மனம் எங்கே போகின்றது' என்னும் நூல் உளவியல் கற்போருக்கு ஒரு மூலாதார நூலாகப் பயன்படும் அதேவேளை பெற்றோருக்கும் மற்றோருக்கும் உபயோகமான அறிவுப்பரப்பினை தரும் ஒன்றாக அமைகின்றது. பெற்றோர் பிள்ளைகள் உறவுமுறைகள், பெற்றோர் தமது நடத்தையில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள், காலத்தோடு ஒட்ட ஒழுகல் வேண்டும் என்னும் நிபந்தனையை முன்வைத்து கட்டுரை ஆக்கம் செய்தது போன்றே அவரது கட்டுரைகள். ஆவர்களைப் புரிந்து கொள்வோமா, பெற்றோருக்கான எட்டுக்கட்டளைகள், பிள்ளைகள் வளர்ப்பு முறை காலத்தோடு மாற்றம் காணப்படவேண்டும், மாற்றம் விளைவிக்கும் திறனுடைய எட்டு நிபந்தனைகள், செவிமடுத்தல் தொடர்புறுதல், அந்தநாள் ஞபாபகம் வந்ததே நண்பனே, நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத்தெரியாதா? நனவு அல்லது பிரக்ஞை, பயம்- அச்சம்தவிர், கற்றல், தூக்கம் கண்களைத் தழுவட்டுமே, கனவு. .. அரு ஒருவர் பார்தது அனுபவிக்கும் நாடகம், பாதியும் மாஸ்லோவும் என மிகவும் நகைச்சுவையான தலைப்புக்கள் நகைச்சுவையோடு கூடிய அறிவுரைகள்.

'திறவுகோல்' அனைத்தும் நாளாந்தம் வெளியே வரும் விஞ்ஞான ஆய்வுக் கண்டு பிடிப்புக்களை நுணுகி அவற்றை இலகுவாக நகைச்சுவை கலந்து மூளைக்கு வித்தகத் தந்துள்ளார். மக்கள் அறிந்து கொள்ளவேண்டிய பலவிடயங்கள் அலசப்பட்டுள்ளன. 'அழகுக்கும் அறிவிற்கும் உத்தரவாதம் மனித முட்டைகள் விற்பனையில்', 'முதுமை இனி இல்லை புதுமையான கண்டுபிடிப்பு', 'புதுமை இனி இல்லை! புதுமையான கண்டுபிடிப்பு!' 'ஆழரளந க்கு வநத மவுசு!"நீ இன்றேல் நான் இல்லை' 'அர்த்தநாரீஸ்வரர் என்பதில் அர்த்தம் உள்ளது' 'நெற்றிக்கண் காணமுடியுமா?', '2050இல் முதியவர்க்கு உயிர் கோபாப் பிரச்சினை' 'பெயர் சொல்ல ஒரு பிள்ளை ஆண்பிள்ளை?' 'ஆண்களுக்கு கேடுகாலாம் வருகிறதா?' 'ஆண்களாலும் முடியும் ஆனால். .', 'இரட்டைக் குழந்தைகளுக்கு இரண்டு தந்தையர்' 'சிறுவனின் வயிற்றில் சிசு' 'இன்னுமொரு ஐம்பது ஆண்டுகளின் பின்னர்' இவ்விதமான பல கட்டுரைகள் காணப்படுகின்றன. அவர் தேர்ந்தெடுத்த கட்டுரைகளின் தலைப்புக்களே அதனுள் என்ன உள்ளது என்பதனைத் தேட ஆவலைத்தூண்டும் கட்டுரைகளைத் தருவதில் போலவே அவரது கருப்பொருட்களும் சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியனவாகும்.

அதிபர் பொ.க.அவர்கள் 'சிரிக்கும் கோடையில் சிலிர்க்கும் பனி நாடு' என்னும் என்.சோமகாந்தன் அவர்களின் பிரயாணக் கட்டுரைகளாக அமைந்த நூலுக்கு அணிந்துரை தந்துள்ளார். அதில் மார்க்கோபோலோ 24 ஆண்டுகள் ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தபின்னர் தான் பார்த்தவற்றை ஒன்றும் தவறவிடாது எழுதியது போன்று சோமகாந்தனின் கனடிய பயணம் அவர் பார்த்தவற்றை எல்லாம் எழுத வைத்திருக்கின்றது எனக்குறிப்பிட்டுள்ளமை அவரது புலமையைப் புலப்படுத்துகின்றது. 'சாமானியன் ஒருவன் கற்பனைக்கும் எட்டாத, சாமானியன் ஒருவனால் சொல்வதற்கு முடியாத எண்ணிறந்த தகவல்களை இந்த மேதாவி மூன்றாம் வேற்றுமையில் சொல்லப்போக 'இவன் கதை அகள்கிறான்' எனச சாமனியன் மாத்திரமல்ல கற்றறிந்தோர்களும் கூடச சொல்லப் போனார்கள். இது கதையல்ல வார்த்தைக்கு வார்த்தை அப்பளுக்கற்ற நிசம் என் மக்கள் உணர்வதற்கு மேலும் ஒரு நூறு வருடங்கள் எடுத்தன' என்பதனை ஒப்புநோக்கித் தந்துள்ளார் என்றால் அவரது ஆழமான பார்வை எப்படியானது என்பது புலப்படும்.

அவர் எழுதிய 'எம்மை வாழவைத்தவர்கள்', 'மரம் மாந்தர் மிருகம்' என்னும் இரு நூல்களும் பல நாடுகளில் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. முதலாவது நூலுக்கு அணிந்துரை எழுதியவர்கள் இருவர் ஒருவர் இன்று நோர்வேயில் வாழ்ந்துகொண்டிருக்கும் வரலாற்றாசான் பொன்னம்பலம் இரகுபதி ஆவார். மற்றவர் பொ.கா. காலத்தில் யாழ்ப்பிராந்திய கல்விப்பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்று இன்று கனடாவில் வாழ்ந்து மறைந்த க. சிவநாதன் அவர்கள். இந்த நூலில் யாழ்ப்பாணத்தில் கோலோச்சிய அதிபர்கள் 24 ஆளுமைகள் பற்றிப் பதிவாக்கியுள்ளார். காலத்தின் கட்டாய தேவையாக அவர் கருதிய நீண்டகாலக் கனவை அவர்தான் மறைவதற்கு முன்னர் பதிந்துவைக்கவேண்டும் என வேணவாக்கொண்டிருந்தார். அவரது நூல்வெளியீட்டிற்கு பெருந்தொகையானவர்கள் வந்து நூல்களைப் பெற்றுச் சென்றார்கள் என்றால் அவரைப் பற்றிய சமூக நிலை எத்தகையது என்பது வெள்ளிடை மலை. இரண்டாவது நூலில் அவர் விரும்பி இரசித்து மகிழும் இயற்கை வனப்பைப் பற்றியது. ஆனால் கதையோடு இணைத்து இவற்றைத் தந்திருப்பது அவரது கதைசொல்லும் திறனையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த நூலுக்கு முனைவர் பால சிவகடாட்சம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்.

இவற்றைவிட நாடக, நடன, இசைத்துறைகளில் நுணக்கமான பார்வையையும் அறிவையும் கொண்டிருந்தார். கனடாவில் இடம்பெற்ற அரங்கேற்றங்கள் அவர் இல்லாமல் நடந்ததில்லை என்று சொல்லும் அளவிற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். அவரது பேச்சுக்கள் யாரையாவது மனங்கோண வைக்காத பண்பார்ந்த ஆனால் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கத்தக்க பேச்சாகவே இருக்கும். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஒரு விழாவில் பங்கேற்றபோது அவரைப் பற்றி அதிபர் ஆற்றிய உரையைக் கேட்டபோது 'என்னைப் பற்றி நான் அறிந்திராதவற்றையெல்லாம் துல்லியமாக அறிந்து வைத்திருக்கின்றாரே' என்று வியப்புற்றுள்ளார்.

இதனை இதனான் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அதன் கண்விடல்

என்னும் வள்ளுவர் வாக்குக்கேற்ப யாரிடம் எந்தப்பணியைக் கொடுக்கவேண்டும், யாரால் இது ஆகும், யார் இதற்கு உரியவர் என்பதனை அவர் ஒருவரைப் பார்த்தமாத்திரத்தே தீர்மானித்துவிடும் இயல்புடையவர். நான் கனடாவிற்கு வந்தபுதிதில் நான் அவரை ஒரு முறை சந்தித்தேன். ஏதோ என்னை அவருக்குப் பிடித்துவிட்டது. ஒரு பாட நூல் வெளியீட்டிற்குப் போயிருந்தேன். ஆனைப் பற்றி எழுதுங்கள் என்றார். அவரது அன்புக்கட்டளையைத் தட்டமுடியாமல் எழுதிக் கொண்டுபோனேன். ஆவர் அதனை உதயன் அலுவலகத்தல் சேர்த்துவிடுமாறு பணித்தார். நான் அவ்விதமே கொண்டு சென்ற கொடுத்தேன். லோகேந்தரலிங்கத்திடம் கொடுத்தேன். அவர் ஒரு பார்வை பார்த்தார். யாரிவர்? என்ன என்ற கேள்விகள் அவர் மனதில் தோன்றியிருக்கவேண்டும். அதிபர் கனகசபாபதி அவரகள் கொடுக்கச் சொன்னார் என்று கூறியதோடு கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டேன். என்னைப் போல் எழுதத் தொடங்கியவர்கள் பலரை ஊக்குவித்தவர் அதிபர் பொ.க. அவர் ஒரு பூந்தோட்ட, மரக்கறித்தோட்டத்துப் பயித்தியம் என்பதனைவிடவும் துடுப்பாட்டப் பயித்தியம் என்று சொல்லாம். அவ்வளவிற்கு அதில் ஊறிப்போய் அனைத்தையும் மறந்தே போயிருப்பார். துடுப்பாட்டம் நடக்கின்றதென்றால் அவரோடு தொலைபேசியில் அழைத்தாலும் கதைநீளாது என்றால் அவர் துடுப்பாட்டம் இடம்பெறுகின்றது என்பதனை உணர்ந்துவிடாம். துடுப்பாட்டம் பற்றி பக்கம்பக்கமாக அவர் எழுதிக் குவித்து வாசகர்களை மகிழ வைத்தவர். அது மட்டுமன்றி அதிகாலையில் துடுப்பாட்டத்தை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தவேளையே அவரது உயிர் பிரிந்திருக்கின்றது என்பது அவர் அதில் எத்துணை ஈடுபாட்டைக்கொண்டிருந்துள்ளார் என்பது தெளிவு. யாராருக்கு விருதுகள் வழங்கப்படவேண்டும், யாராருக்குப் பாராட்டுவிழா எடுக்கவேண்டும், யாராருக்கு பிறந்தநாள், திருமண நினைவுநாள் கொண்டாடவேண்டும் எனக் கணக்குப்போட்டு அவற்றைச் செயற்படுத்தியவர். குறிப்பாக யாருக்கு யார்மூலம் செய்யவேண்டும் என்பதனையும் அறிந்து அவர்களை முன்னிருத்திச் செயற்பட்டவர். கவிநாயகர் வி. கந்தவனம், டாக்டர் கதிர் துரைசிங்கம், பண்டிதர் மா. சே. அலக்சாந்தர், சட்டத்தரணி மனுவல்ஜேசுதாசன், செல்வா இலங்கையன், குறமகள் வள்ளிநாயகி, போன்றோரின் பாராட்டுவிழாக்கள் மட்டுமல்ல 60வது 75வது பிறந்த நாள் கொண்டாடங்களுக்கான முன்னெடுப்புகளுக்குச் சூத்திரதாரி அவரே. இதற்காக அவர் குழுக்களை அமைத்துச் செயற்படவைத்தார். அனைத்துக்குழுக்களில் மட்டுமல்ல அவரது நூல்வெளியீட்டிலும் என்னை முக்கிய வகிபாகத்தை ஏற்க வைத்திருந்தார். அவ்விதமே உதயன் சர்வதேச விருது விழா, போன்ற காத்திரமான விடயங்களுக்கு ஆலோசகராகவும் பணியாற்றியவர்.




புதிதாக வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை ஆக்கவேண்டும் என்பதில் முனைப்புக்காட்டியவர். ஆதற்காக விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் இராஜா மகேந்திரனின் உதவியோடு மாதாந்தம் கூடி சொல்லாக்கம் செய்வதற்குத் தலைமைதாங்கி வழிநடத்தியவர் என்பது அவரது அபார முயற்சி என்றே சொல்லுவேன். எந்தெந்தத் துறைகளில் யார் யார் வல்லுநர் என அறிந்து அவர்களை அழைத்து அந்த சொல்லாக்கத்தை மேற்கொள்ள அவருக்கு உறுதுணையாக நின்றவர்களுள் மணி வேலுப்பிள்ளை முக்கியமானவர்.

07 பக்கம் தொடரும்.....

## 'அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் பற்றியது

06 பக்கம் தொடர்ச்சி...

புதிதாக வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை ஆக்கவேண்டும் என்பதில் முனைப்புக்காட்டியவர். ஆதற்காக விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் இராஜா மகேந்திரனின் உதவியோடு மாதாந்தம் கூடி சொல்லாக்கம் செய்வதற்குத் தலைமைதாங்கி வழிநடத்தியவர் என்பது அவரது அபார முயற்சி என்றே சொல்லுவேன். எந்தெந்தத் துறைகளில் யார் யார் வல்லுநர் என அறிந்து அவர்களை அழைத்து அந்த சொல்லாக்கத்தை மேற்கொள்ள அவருக்கு உறுதுணையாக நின்றவர்களுள் மணி வேலுப்பிள்ளை முக்கியமானவர்.

புத்திரியைகளுக்கு எழுதியதோடு மட்டுமன்றி அவற்றிற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தியவர் என்பதனையும் மறக்கமுடியாது. தாய்வீடு, உதயன், விளம்பரம், தமிழர் தகவல், ஈழநாடு போன்ற பத்திரிகை ஆசிரியர்கள் 'அதிபர்' அவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுவருவதனை நான் நன்கு அறிவேன்.

அவரிடம் கற்றவர்கள் உலகின் பல பாகங்களிலும் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். அவர் உயிரியல் ஆசானாக இருந்தமையினால் மருத்துவர்களாக உள்ளவர்கள் அநேகர். அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு பெரும் துன்பத்தையும் ஒரு இடைவெளியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதும் கலை இலக்கிய உலகிற்கு பேரிழப்பு என்பதும் நிதர்சனம். ஒரு ஜனரஞ்சக மனிதரை தமிழ் கூறும் உலகு இழந்துவிட்டது. அன்பால் பெருந்தொகையான உள்ளங்களைக் கவர்ந்திழுத்த அவரது பிரிவு பழகியவர்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளமை வியப்பில்லை.

அதிபர் காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு, திருமதி குருநாதபிள்ளை இராசம்மா தம்பதியினரின் புதல்வி அமிர்த கௌரியைத் ஒக்டோபர், 1963ல் திருமணம் செய்துகொண்டார். ஆமிர்தகௌரி அவர்கள் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். இவர்களது திருமணத்தை நிறைவேற்றுவதில் அவரது முதல்மாணாக்கர் என அடிக்கடி குறிப்பிடும் நெருங்கிய நண்பர் கதிர் துரைசிங்கம் தம்பதியினர் உழைத்தனர் என்பதனை நன்றிப்பெருக்கோடு அடிக்கடி நினைவு கூருவதனை அறிவேன். இதன்பயனாக மணிவண்ணன், மணிமாறன், மணிவிழி, மணிமொழி எனப்பெயரிய நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். துரதிஷ்டவசமாக துணைவியாரை புற்றுநோய்க்கு பறிகொடுத்த அதிபர் அவர்கள் இரண்டாவது மகன் மணிமாறனையும் பறிகொடுத்த மனச்சுமையோடு வாழ்ந்துவருவது துர்லபமே! முதன்மைப் புதல்வன் மணிவண்ணன் திருமணம் செய்து ஒரு புதல்வியைப் பெற்றெடுத்து அதிபருக்குப் பேத்தியாக இலட்சியா மணிவண்ணனைக் கண்டு களிக்கவைத்துள்ளமை அவருக்கு மனமகிழ்வைத்தரும் ஒன்றாக அமைந்துள்ளமையை அறியமுடிகின்றது. ஆன்புப்பேத்தியின் வளர்ச்சி, முன்னேற்றத்தை கண்டு அனுபவித்து இன்பங்கொள்ளும் நிலைமை அவருக்கு புது உற்சாகத்தை ஊட்டுகின்றமை கருத்திற்கொள்ளத்தக்கது.

ரொறன்ரோவில் குடியேறிய அதிபர் அவர்கள் தான் வாழ்ந்த கூட்டுறவுக்குடியிருப்பில் ஒரு நூலகத்தை ஆரம்பிப்பதில் முழுமூச்சாக உழைத்தவர். அந்த நூல் நிலையம் நண்பர்களால் அவரின் பெயரைச் சூடிக்கொண்டது அவரது பெருமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. தனக்கென வாழப் பிறர்க்குரியாளராக வாழ்ந்து வந்தவர், வருபவர் அதிபர் திரு. கனகசபாபதி அவர்கள். 'என்னை நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்றார் ஞானி திருமூலர். ஆம் அந்தவழியிலே தான் இந்த மண்ணிற்கும் மக்களுக்கும் ஏதாவது செய்தே ஆகவேண்டும் என விளைந்தவர், விளைந்து வருபவர் மட்டுமன்றி தன்னைச் சார்ந்தோரை நெறிப்படுத்தி வழிப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவருவதில் சமர்த்தராகவே விளங்குகின்றார். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என அல்லும் பகலும் அனைவரதமும் தொடர்ந்து செயற்படுபவர். ஏந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் அதனை ஏற்றுத் தவறாது சென்று வருபவர். தனது சுக துக்கங்களை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பண்பாளர். தனது உயரிய பார்வையால் அனைவரையும் வசீகரிக்கும் அற்றல் கொண்டவர். இன்றும் எம்முள்ளே மறைந்தும் மறையாத ஆசானாகவே அவர் மனக்கண்முன் காட்சிதருகின்றார்.

முற்றும்.

# எமது பல்கலைக்கழகத்தில் கருத்து சுதந்திரத்திற்கான வெளியினை உறுதிப்படுத்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை

பல்கலைக்கழகத்தில் கருத்து சுதந்திரத்திற்கான வெளியினை உறுதிப்படுத்தல் என்ற தலையங்கத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது 02-10-2024 அன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஆரோக்கியமான விவாதங்களிற்கும், கருத்துப் பரிமாறல்களிற்குமான களமாக பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன. கருத்துச் சுதந்திரம் கல்விச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். பல்கலைக்கழக சமூகத்தினை சேர்ந்தவர்கள் கருத்துக்களை கருத்துக்களால் எதிர் கொள்ளவல்ல அறிவு முதிர்சியினை கொண்டிருப்பர்.

அண்மையில் 15 பல்கலைக்கழக ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிற்கு எதிராக யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டி, முதலான சில சம்பவங்கள் கருத்து சுந்திரத்திற்கான வெளியினை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளின் பின்னால் உள்ளவர்களின் அநாகரீகமான நடவடிக்கைகளால் அவர்கள் தங்களை மாத்திரமன்றி இப் பல்கலைக்கழகத்தினையும் இழிவுபடுத்துகின்றனர்.

யாழ் பல்கலைக்கழகத்திற்கு களங்கத்தினை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான அநாகரீகமான செயற்பாட்டினை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF JAFFNA TEACHERS' ASSOCIATION
UNIVERSITY OF JAFFNA

Reg No: 8231

Executive Committee 2023-2024

President
Prof. P. Iyngaran

General Secretary
Mr. V. Vijayabaskar

Vice President
Dr. S. Sooriyakumaran

Assistant Secretary
Dr. Akilan Kathirkamar

Treasurer
Ms. R. Mithulan

UTA Office
Students Complex
University of Jaffna
PO Box 57
Thirunelvely
Jaffna

Email: jutasec@gmail.com

02/10/2024

**பல்கலைக்கழகத்தில் கருத்து சுதந்திரத்திற்கான வெளியினை உறுதிப்படுத்தல்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை**

ஆரோக்கியமான விவாதங்களிற்கும், கருத்துப் பரிமாறல்களிற்குமான களமாக பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன. கருத்துச் சுதந்திரம் கல்விச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். பல்கலைக்கழக சமூகத்தினை சேர்ந்தவர்கள் கருத்துக்களை கருத்துக்களால் எதிர் கொள்ளவல்ல அறிவு முதிர்சியினை கொண்டிருப்பர்.

அண்மையில் 15 பல்கலைக்கழக ஆசிரியர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றிற்கு எதிராக யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டி, முதலான சில சம்பவங்கள் கருத்து சுந்திரத்திற்கான வெளியினை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

இவ்வாறான கோழைத்தனமான செயற்பாடுகளின் பின்னால் உள்ளவர்களின் அநாகரீகமான நடவடிக்கைகளால்; அவர்கள் தங்கள்ள மாத்திரமன்றி இப் பல்கலைக்கழகத்தினையும் இழிவுபடுத்துகின்றனர். யாழ் பல்கலைக்கழகத்திற்கு களங்கத்தினை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான அநாகரீகமான செயற்பாட்டினை யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது. இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டவர்களை இனங்கண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி நிற்கின்றது

தலைவர்
செயலாளர்

தலைவர்/ President
யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.

செயலாளர்/ Secretary
யாழ்ப்பாணம்.

# Ontario Government Introducing Over 35,000 Students to Careers in Skilled Trades

## ஒன்ராறியோ அரசு 35,000 மாணவர்களுக்கு தொழில் சார்ந்த துறைகளில் கல்வி கற்கும் வாய்ப்பை அறிமுகப்படுத்துகிறது

தொழில்துறைகள் தொடர்பான சந்திப்புக்களையும் கண்காட்சிகளையும் 15 நகரங்களில் நடத்துவதன் மூலம் மாணவர்கள் மத்தியில் தொழில்துறை சார்ந்த கற்கை நெறிகளை விரிவுபடுத்துவது மாத்திரமல்ல , ஒன்றாரியோ மாகாணத்தில் அடுத்த தலைமுறை தொழிலாளர்களை உற்பத்தித்தித்துறையில் நேரடியாக பங்கெடுக்கின்ற வெளிப்பாட்டைக் கொடுக்கும்

இவ்வாறு ஒன்றாரியோ மாகாணத்தின் தொழில், குடிவரவு.தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் David Piccini தெரிவித்துள்ளார். ஒன்றாரியோ மாகாண அரசின் தொழில், குடிவரவு. தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள தொழில் சார்ந்த பயிற்சி நெறிகளில் மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான அறிவிப்பை அவர் நிகழ்த்துகையில் இவ்வாறு தெரிவித்தார்.
அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில்

"ஒன்ராறியோ அரசாங்கம் அதன் வெற்றிகரமான நிலைகளை விரிவுபடுத்துகிறது! இந்த இலையுதிர்காலத்தில் திறமையான தொழில்துறைகள் சார்ந்த கருத்தரங்குகளும் கண்காட்சிகளும் பல நகரங்களில் நடத்தப்படவுள்ளன. இந்த திட்டத்தின் மூலம். , 35,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு தொழில் பயிற்ச்சிகள் தொடர்பான விளக்கங்களை வழங்கி அவை மூலம் உற்சாகமான, தேவைக்கேற்ப தொழில்களை அறிமுகப்படுத்துகிறது. தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக, மாகாணத்திற்குத் தேவையான வீடுகள், நெடுஞ்சாலைகள், மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் சமூக உள்கட்டமைப்பு ஆகியவற்றைக் மேற்கொள்வதற்கு அடுத்த தலைமுறை தொழிலாளர்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்த இந்த கண்காட்சிகளும் கருத்தரங்குகளும் உதவுகின்றன. தொழில் கண்காட்சிகளைக் கொண்ட புதிய நகரங்களில் பேரி, கோபோர்க், கார்ன்வால், கிச்சனர், நயாகரா நீர்வீழ்ச்சி, நார்த் பே மற்றும் தெற்கு முள்ளம்பன்றி (டிம்மின்களுக்கு அருகில்) ஆகியவை அடங்கும்.

"கடந்த ஆண்டு, நாங்கள் எங்கள் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கினோம்! தொழில் கண்காட்சிகள், ஆயிரக்கணக்கான மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திறமையான தொழில் சார்ந்த துறைகளில் பலனளிக்கும் தொழில்களைப் பற்றிய ஒரு பார்வையை அளிக்கிறது - மேலும் இந்த ஆண்டு, எங்கள் நிலை உயர்கிறது! தொழில் கண்காட்சிகள் முன்னெப்போதையும் விட பெரியவை" என்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் தொழில், குடிவரவு.தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர்அமைச்சர் டேவிட் பிச்சினி கூறினார். "இந்த தொழில் கண்காட்சிகளை மாகாணம் முழுவதும் ஏழு புதிய நகரங்களில் நடத்துவதன் மூலம், 35,000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு, பாதுகாப்பானதும் தங்கள் நேரடி பயிற்சிகளை அவர்களே பெற்றுக்கொள்ளும் வகையில் வழங்கும் நடமாடும் கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகளுடன், நாட்டின் மிக நவீன, தேவைக்கேற்ப தொழில்களைப் பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பை வழங்க முடியும்.- கற்றல் வாய்ப்புகள். எங்கள் தொழில் கண்காட்சிகளைப் பார்வையிடவும், வர்த்தகங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், சிறந்த எதிர்காலத்தை உருவாக்க உதவவும் அனைவரையும் அழைக்கிறேன்.

வாகன சேவை தொழில்நுட்ப வல்லுநர்கள், கொதிகலன் தயாரிப்பாளர்கள் மற்றும் மரவேலை செய்வோர் உட்பட 144 திறமையான தொழில்துறைகளை முன்னிலைப்படுத்தும் ஆற்றல்மிக்க, பல நாள் தொழில் கண்காட்சிகளின் தொடர் ஆகும். 7 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள 35,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள், அதே போல் பெற்றோர்கள் மற்றும் வேலை தேடும் இளைய தலைமுறையினர், தொழிலதிபர்கள் வர்த்தகர்கள் மற்றும் உள்ளூர் முதலாளிகளிடமிருந்து நேரடியாகக் கேட்கும் போது நாங்கள் நடத்தும் நடமாடும் கண்காட்சிகள் மற்றும் பாதுகாப்பான, நடைமுறைச் செயல்பாடுகள் மூலம் இந்த தொழில்துறைகள் தொடர்பாக அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவார்கள். முதல் கண்காட்சி செப்டம்பர் 12 ஆம் தேதி கோபோர்க் நகரத்தில் தொடங்குகிறது மற்றும் அடுத்த 12 வாரங்களுக்கு மாகாணம் முழுவதும் உள்ள ஏனைய நகரங்களில் தொடரும். (இவற்றை கீழே உள்ள பட்டியலில் காணலாம்)

"அறுபது வருடங்களுக்கு முன்னர், எனது தாத்தா பாட்டி எனது சொந்த ஊரில் ஒரு உள்ளூர் குழாய் வணிகத்தைத் தொடங்கினர், மேலும் திறமையான தொழில் துறைகள் எவ்வளவு பூர்த்தி செய்கின்றன மற்றும்தேவைப்படுகின்றனஎன்பதைநான்நேரடியாகப் பார்த்தேன்" என்று கல்வி அமைச்சர் ஜில் டன்லப் கூறினார். "நீண்ட காலமாக, போதுமான இளைஞர்கள் கற்றல் மற்றும் திறமையான வர்த்தகங்களை வெளிப்படுத்தவில்லை - ஆனால் லெவல் அப் போன்ற நிகழ்வுகளுக்கு நன்றி! கண்காட்சிகள் மற்றும் எங்கள் அரசாங்கத்தின் வேலை, அது இனி இல்லை. அனைத்து மாணவர்களும் பட்டதாரிகளுக்கு குறைந்தபட்சம் ஒரு தரம் 9 அல்லது 10 தொழில்நுட்பக் கல்விக் கிரெடிட்டையாவது பெறுவதை நாங்கள் கட்டாயமாக்கியுள்ளோம். எங்கள் புதிய ஒன்டாரியோ யூத் அப்ரண்டிஸ்ஷிப் திட்டம் - மூத்த உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான ஃபோகஸ்டு அப்ரெண்டிஸ்ஷிப் திறன்கள் பயிற்சித் திட்டத்துடன் பயிற்சிக்கான பாதைகளை நாங்கள் அதிகரித்து வருகிறோம். ஒன்ராறியோவின் மாணவர்கள் திறமையான வர்த்தகங்கள் சாத்தியமான மற்றும் அற்புதமான வாழ்க்கைப் பாதையை வழங்குகின்றன என்பதை உறுதிசெய்ய நான் கடமைப்பட்டுள்ளேன்."

செப்டம்பர் 12 முதல் நவம்பர் 28, 2024 வரை 15 நகரங்களில் தொழில் கண்காட்சிகள் நடைபெறுகின்றன:
கோபூர்க் - செப்டம்பர் 12

**Ministry of Labour, Training and Skills Development**

Career fairs are taking place in 15 Cities between September 12 and November 28, 2024:

Cobourg – September 12
Barrie – September 17
Kitchener – September 19
Sault Ste. Marie – September 24
Thunder Bay – September 26
Sudbury – October 2
South Porcupine – October 4
Cornwall – October 8
Ottawa – October 10 & 11
North Bay – October 16
Oshawa – October 22 to 24
LaSalle – October 29
London – November 12 & 13
Niagara Falls – November 20 & 21
Mississauga – November 26 to 28

***Kalapiriya - Local Journalism Initiative Reporter- 1***

## சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் முதியோர்கள் கௌரவிப்பு நிகழ்வு!

சர்வதேச முதியோர் தின வாரத்தை முன்னிட்டு கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வறுமை கோட்டுக்கு உட்பட்டு வாழும் தெரிவு செய்யப்பட்ட முதியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கோப்பாய் நவ மங்கை நிவாசத்தில் இடம்பெற்றது.



நவமங்கை நிவாச நிறுவனர் சுவர்ணா நவரட்ணம் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வட மாகாண பிரதம செயலாளர் லக்ஷ்மன் இளங்கோவன் மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் சிவசிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.




குறித்த நிகழ்வில் 30க்கும் மேற்பட்ட முதியவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு தல 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் சேலைகள் மற்றும் வேட்டிகளும் வழங்கி வைக்கப்பட்டதன.

இதன் போது எதிர்வரும் 8ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள முதியோர் தின விழாவுக்காக 25 சேலைகள் பிரதேச செயலக உத்தியோகத்தரிடம் வழங்கி வைக்கப்பட்டன.



# பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டம் ஒரு ஆசனத்தை இழப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகளே காரணமாக உள்ளார்களா?

கே.பாலா

**பாராளுமன்றத்தேர்தலில் தமது மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரித்துக்கொள்ள, மாவட்ட ஆசனங்களை கைப்பற்ற வேண்டுமென்பதில் ஒவ்வொரு கட்சியும் "தீயாய்"வேலை செய்து கொண்டிருக்கையில் தமிழ் தேசியக்கட்சிகள் வழக்கம் போலவே பிளவுபட்டுப்போய் "நீயா நானா "போட்டியிலுள்ள நிலையில் நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டம் ஒரு ஆசனத்தை இழப்பதாக தேர்தல் ஆணைக்குழுவும் அறிவித்துள்ளது.**



இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று ஜனாதிபதியாக ஜே .வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தித் தலைவர் அநுரகுமார திசாநாயக்க " மக்கள் புரட்சி"மூலம் தெரிவு செய்யப்பட்டநிலையில் நாட்டின் 9 ஆவது பாராளுமன்றம் கடந்த 24 ஆம் திகதி நள்ளிரவு கலைக்கப்பட்டதுடன் 10 ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடத்தப்படுமென புதிய ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள 9 ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பி.க்கள்,முன்னாள் எம்.பி.க்கள் , மற்றும் தாமும் ஒரு எம்.பி.யாகி விட வேண்டுமென விரும்புவோரும் தேர்தல் களத்தில் இறங்கத் தயாராகி வருகின்றனர்.

இந்த தேர்தலை எதிர்கொள்ள சிங்கள, முஸ்லிம் ,மலையகக் கட்சிகள் தம்மைத் தயார்படுத்தி வருவதுடன் தமது வெற்றி வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான ,அதிக ஆசனங்களை பெறுவதற்கான வியூகங்களையும் வகுத்து , பரந்துபட்ட கூட்டணிகளையும் அமைத்து வருகின்றன. பாராளுமன்றத்தேர்தலில் தமது மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரித்துக்கொள்ள, மாவட்ட ஆசனங்களை கைப்பற்ற வேண்டுமென்பதில் ஒவ்வொரு கட்சியும் "தீயாய்"வேலை செய்து கொண்டிருக்கையில் தமிழ் தேசியக்கட்சிகள் வழக்கம் போலவே பிளவுபட்டுப்போய் "நீயா நானா "போட்டியிலுள்ள நிலையில் நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டம் ஒரு ஆசனத்தை இழப்பதாக தேர்தல் ஆணைக்குழுவும் அறிவித்துள்ளது.

இலங்கையில் பாராளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த தமிழர்கள் தேசிய இனமாக கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் வாழ்கின்றனர் .இதில் அம்பாறை மாவட்டத்தில் 7 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 4 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் என 16 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன

வடக்கு மாகாணத்தில் முல்லைத்தீவு வவுனியா மற்றும் மன்னார் அடங்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களும் கிளிநொச்சி ,யாழ்ப்பாணம் அடங்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 6 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களுமாக 12 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன .ஒட்டு மொத்தமாக வடக்கு,கிழக்கு மாகாணத்தில் 28 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்கள் உள்ளன.

இலங்கை பாராளுமன்ற தேர்தல்களில் தமிழ் தேசிய கட்சிகள் ஓரணியாக "தமிழ் தேசியக்கூட்டமைப்பு"என்ற பெயரில் களமிறங்கிய முதல் தேர்தலான 2004 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தேர்தலில் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் 633,654 வாக்குகளைப் பெற்று நேரடி பாராளுமன்ற ஆசனங்களாக 20 ஆசனங்களையும் தேசியப்பட்டியல் ஆசனங்களாக 2 ஆசனங்களையும் பெற்று 22 ஆசனங்களுடன் பலமான அணியாக "தமிழ் தேசியக்கூட்டமைப்பு" என்ற ஒற்றுமையுடன் தமிழ் தேசிய கட்சிகள் பாராளுமன்றம் சென்றன.

இதில் வடக்கில் யாழ் மாவட்டத்தில் இருந்த 9 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 8 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன ,வன்னி மாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 5 ஆசனங்களையும் ஐ.தே .க .ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது. இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் இருந்த 15 ஆசனங்களில் 13 ஆசனங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 4 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் திகாமடுல்ல அதாவது அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 1 ஆசனத்தை யும் கைப்பற்றியது .திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு 2 ஆசனங்களை கைப்பற்றியது. இதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் இருந்த 16 ஆசனங்களில் 7 ஆசனங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியிருந்தது. இவ்விரு மாகாணங்களிலும் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் இரு தேசியப்பட்டியல் ஆசனங்களும் கிடைத்ததால் மொத்தமாக 22 பாராளுமன்ற ஆசனகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது.

இதற்கு பின்னர் நடந்த 2010 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 13 நேரடி ஆசனங்களும் ஒரு தேசியப்பட்டியல் ஆசனமுமாக 14 ஆசனங்களைப் பெற்று வீழ்ச்சியை சந்தித்தது. . இதில் யாழ்மாவட்டத்தில் இருந்த 9 ஆசனங்களில் 5 ஆசனங்களையும் வன்னிமாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 1ஆசனத்தையும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் 1ஆசனத்தையும் கைப்பற்றியது.

இதற்கு பின்னர் நடந்த 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 14 நேரடி ஆசனங்களும் 2 தேசியப்பட்டியல் ஆசனங்களுமாக 16 ஆசனங்களைப் பெற்றது. இதில் யாழ்மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 5 ஆசனங்களையும் வன்னிமாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 4 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 1ஆசனத்தையும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் 1ஆசனத்தையும் கைப்பற்றியது. இதற்கு பின்னர் நடந்த 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்தேசியக்கூட்டமைப்பு 9நேரடி ஆசனங்களும் 1தேசியப்பட்டியல் ஆசனமுமாக 10 ஆசனங்களைப் பெற்று பெரு வீழ்ச்சியை சந்தித்தது. . இதில் யாழ்மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் 3 ஆசனங்களை தமிழ் தேசியக்கூட்டமைப்பும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் ஈ.பி.டி.பி. ஒரு ஆசனத்தையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஒரு ஆசனத்தையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றன. வன்னிமாவட்டத்தில் இருந்த 6 ஆசனங்களில் 3 ஆசனங்களையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்த 5 ஆசனங்களில் 2 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இருந்த 7 ஆசனங்களில் எந்தவொரு ஆசனத்தையும் பெறவில்லை திருகோணமலை மாவட்டத்தில் இருந்த 4 ஆசனங்களில் 1ஆசனத்தையும் கைப்பற்றியது.



யாழ்மாவட்டம்முன்னர் 11 பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருந்தது.ஆனால் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் அது பின்னர் 9 ஆனது.அதன்பின்னர் 7 ஆனது. தற்போதுபாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அந்த ஆசனங்களின் எண்ணிக்கை 6 ஆக குறைந்துள்ளமை தமிழ் கட்சிகளையும் வேட்பாளர்களையும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதுடன் ஒரு வேட்பாளர் வெற்றிபெற பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கையையும் கணிசமாக அதிகரித்து விட்டுள்ளது. இதனால் தமிழ் கட்சிகளும் அதன் வேட்பாளர்களும் தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ள மிகப்பெரும் பிரசாரங்களையும் பிரயத்தனங்களையும் செய்ய வேண்டியுள்ளதுடன் தமிழ் கட்சிகளுக்கிடையிலும் கடும் போட்டிகளும் ஏற்பட்டுள்ளன.

வாக்காளர் எண்ணிக்கை குறைவடைந்ததால் வடக்கில் யாழ் தேர்தல் மாவட்டம் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை இழந்துள்ள நிலையில் கிழக்கில் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் தமிழர் பிரதிநிதித்துவம் குதிரைக் கொம்பாகவேயுள்ளது.அம்பாறை மாவட்டத்தில் கடந்த முறை தமிழர் பிரதிநிதித்துவ ஆசனம் கிடைக்கவில்லை. திருகோணமலையில் இரா. சம்பந்தன் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை தக்கவைத்து வந்த நிலையில் அவரின் மரணத்தினால் அந்த ஆசனமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாறு வடக்கு,கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவ ஆசனங்கள் குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அதனைப்பற்றி கொஞ்சம் கூட அக்கறையோ கவலையோ ,அதன் விளைவாக ஏற்படப்போகும் ஆபத்துக்களை அறிந்து கொள்ளும் அறிவோ இன்றி வழக்கம் போலவே ஒற்றுமை விடயத்தில் "சபிக்கப்பட்ட", கழுத்தறுப்பு அரசியல், குழிபறிப்பு அரசியலில் யாருமே நிகராக நிற்க முடியாத " தமிழ் தேசியக் கட்சிகள்" நீயா,நானா" தலைக்கனப் போட்டியிலும் ,வீடா,குத்துவிளக்கா,சங்கா என்ற தேர்தல் சின்ன கயிறுழுப்புக்களிலும் ஈடுபட்டு தமக்குள் முட்டி மோதி தமிழர் அரசியலை பலவீனப்படுத்தி வருகின்றன.

23 பக்கம் தொடரும்.....

# உணவே மருந்து
## வாழ்வில் இயற்க்கையும் உணவையும் தேடி ஒரு பயணம்

சென்ற மாத தொடர்ச்சி

அவன் ஏற்படுத்திய உலகப்போர்கள் (அரிசி)த் தட்டுப்பாட்டை உருவாக்கின.

விளைவு..?

தமிழருக்குச் சப்பாத்தியும் பரோட்டாவும் அறிமுகமாயின ...

சப்பாத்தியினைக் கொடுத்தானே அன்றி அதை உண்ணும் முறை சொன்னான் இல்லை. சப்பாத்தி என்பது நெய் சேர்க்காமல் உண்ணகூடாத உணவு...

ஆம்.... அதில் உஷ்ணம் அதிகம், அரேபியர் அதை தயிரோடு உண்பர், வட இந்தியர் நெய்யோடு உண்பர், தமிழன் அதை உண்ணத் தெரியாமல் உண்டான்..



நோய் பெருகிற்று.... அதாவது சூடான பூமியில் சூடு கொடுக்கும் உணவினை உண்டு நம்மை நாமே கெடுத்தோம்...

குளிர் பிரதேச நாட்டில் அரிசி கஞ்சியும், பனங்கள்ளும் குடிக்கச் சொல்லுங்கள், அவன் குடிப்பானா?குடித்தால் என்னாகும் என அவனுக்குத் தெரியும், அவன் தன் சமூகத்தைக் காத்து கொண்டிருக்கிறான்.

உஷ்ணத்தால் ஏற்படும் நோய்க்கு விஞ்ஞானம் காரணம் சொல்லாது ..

இங்கு உஷ்ணத்தை கட்டுபடுத்த நல்லெண்ணெய் குளியலும் நெய்யும் இன்னும் பலவும் இருந்தது..

எல்லாம் பழமைத்தனம் என ஒழிக்கபட்டது.

இன்று எண்ணெயும் கலப்படம்... இப்போதுள்ள தலைமுறை டால்டாவினை நெய் என்றும் கலப்பட எண்ணெயினை சுத்தமான எண்ணெய் எனவும் அறிகின்றன...

பரிதாபம்.

காரணம், அவற்றுக்கு உண்மையான பொருளும் மணமும் எப்படி இருக்கும் என்றே தெரியவில்லை....

அவை என்ன செய்யும்?

எண்ணெயில் கலப்படம், உணவு பொருளில் கலப்படம் , இவை எல்லாம் இன்று ருசி இல்லா உணவல்ல... ஆரோக்கியமில்லா உணவினைக் கொடுத்துவிட்டன...!

நெய்யும் பாலும் வெண்ணெயும் போலி என அரசே சொல்லும் நிலையென்றால் தனியார் நிலையங்கள் எப்படி இருக்கும்?

எதையோ தின்று எதையோ குடித்து, எதையோ புகைத்து, எதையோ மென்று இல்லா நோய்கள் எல்லாவற்றையும் தனக்குள்ளே இழுத்துவிட்டான் தமிழன்.

எதை உண்டாலும் கசப்பாய் முடிப்பது உலகளாவிய உணவு முறையாய் இருந்தது. சீனாவில் தேநீர் எனும் கசப்பு பானத்தை அருந்துவார்கள்..

ஆப்ரிக்காவிலும் அரேபியாவிலும் காப்பி இருந்தது..

தமிழனுக்கு வேப்பம்பூ துவையலும் பாகற்காயும் அன்றாடம் சமையலில் இருந்தது.

பாகம் என்றால் சமையல் அதில் இருக்க வேண்டிய காய் பாகற்காய் ஆனது..!

புரிகிறதா...?

இவை முறையாக இருந்தவரை சர்க்கரை நோய் இல்லை..

பாலில் காப்பி, டீ , சீனி என வெள்ளையன் ஏற்படுத்திய வியாபார தந்திரம், இன்று நம் வாழ்வியல் அங்கமாக மாறிவிட்டது. காபியும் டீயும் பருகியே தீரவேண்டியவை அல்ல..

அவை இன்றியும் வாழமுடியும்...அதுபோக பேக்கரிகள் வந்து நிரம்பியிருக்கின்றன பரோட்டாவும் பேக்கரியும் இன்னும் பலவும் இங்கு ஏற்ற விஷயம் அல்ல.

விஷம் அவை..

இவை பெருகப் பெருக மருத்துவ மனைகளும் பெருகுகின்றன.
இச்சமூகம் எவ்வளவு நல்ல விஷயங்களை நாகரீகம் என இழந்து இன்று சீழ்பிடித்த சமூகமாக மாறிவிட்டது என நினைக்கும் பொழுது தலையே சுற்றுகின்றது

ஏகபட்ட விஷயங்களை இழந்துவிட்டோம், ஆனால் எதை எல்லாம் இழந்தோம் என்பதை ஆலயங்களிலும் இந்த நாட்டின் பாரம்பரியமான பண்டிகை மற்றும் சடங்குகளிலும் காணலாம்..

தெய்வங்களுக்குப் பாரம்பரியமாக படைக்கபடும் பழம், பானம் எல்லாம் உடலுக்கு நல்லவையே..

துளசி போல் அருமருந்தில்லை..

அங்கு பயன்படும் எலுமிச்சை முதல் எள் வரை எல்லாமே நன்மை கொடுப்பவை. தாம்பூலத் தட்டில் காணப்படும் வெற்றிலை முதல் எல்லாம் ஆரோக்கியமே..

தேர்களில் தெய்வங்களுக்கு வீசபடும் மிளகும், உப்பும் உடலுக்கு எக்காலமும் நன்மையே.

உங்களுக்கு ஆரோக்கியமான உணவு வேண்டுமென்றால் நம் மரபு வழி உணவினைப் பாருங்கள், நைவேத்தியம் எனப்படும் உணவு முறையாகத் தயாரிக்கபடுமானால் அதை விட ஆரோக்கிய உணவு வேறு இல்லை...









அசைவத்தில் கூட கிராம ஆலயங்களைக் கவனிக்கலாம், ஆடும்,சேவலும் எப்படி
இருந்தால் அங்கு பலியிட வேண்டும் எப்படி சமைக்கபட வேண்டும் என்ற விதிகள் உண்டு.

அதன்படி உண்டால் அவையும் ஆரோக்கியமே, (பிராய்லர் கோழியினை ) அங்கு வெட்டுவதில்லை.சனிகிழமை தோறும் நல்லெண்ணெய் தேய்த்தால் உஷ்ணம் வராது.. அதிகாலை சேவலோடு எழுவதும் அந்தியில் பறவைகள் ஓயும்பொழுது தூக்கத்தை தழுவதும் நோய்க்கு இடம் கொடா...

மலைமேல் ஏறி தெய்வத்தை வணங்குவதும் , குளிர் ஆறுகளில் குளிப்பதும் ஆரோக்கியமே, மாதம் இருமுறையாவது இருக்கும் விரதம் உடலை வலுபடுத்தும்..

இன்னும் ஏராளமான விஷயங்கள் உண்டு..

அவை எல்லாம் இழந்ததன் விளைவு நீரிழிவு முதல் ஏகப்பட்ட நோய் ஒருபுறம்.. கருத்தரிப்பு சிக்கல் சிசேரியன் என மறுபுறம்.



மிக மிக மோசமான சிக்கலுக்கு செல்கின்றது இச்சமூகம்..

பழமையினை மீட்டெடுத்து நல்வாழ்வு வாழ இந்துமதம் உதவும், நம் முன்னோரின் நலமான பலமான வாழ்வின் ரகசியம் அங்குதான் புதைந்திருக்கின்றது.. அதை மீட்டெடுப்பீர்களாயின் நல்வாழ்வு கிட்டும்... மாறாக அதெல்லாம் பழமை என
ஒதுக்குவீராயின் டாக்டரும் மருந்துகடைக்காரனுமே உங்களுக்கு தெய்வமாவான்..

அப்படி ஒரு பலஹீனமான சமூகமாக நம் நாடு உருவாக வேண்டும் என ஆங்கிலேயர்கள் ஆசைபட்டதன் விளைவுதான் இது. இந்தியா தன் மருந்து மற்றும் மருத்துவத்தின் வேட்டைக்காடாகும் என்பது அக்காலத்தில் இருந்தே அவன் கணக்கு.. அது மிளகைத் திருடி வற்றலைக் கொட்டுவதில் தொடங்கி இன்றைய பர்கர், பீட்ஸா வரை தொடர்கின்றது...

நாம் பாரம்பரியத்தை மீட்டெடுத்தால் தவிர நம் ஆரோக்கியத்தை திருப்பமுடியாது... என்று அதை இச்சமூகம் உணருமோ அன்றே இங்கு நல் ஆரோக்கியம் திரும்பும்..ஆம். மாறாக, கண்டதையும் உண்டுவிட்டு தெருத் தெருவாக, கடற்கரை கடற்கரையாக நடந்தாலும் ஆகபோவது ஒன்றுமில்லை... நடக்க வேண்டியது வயல்வரப்புகளை நோக்கி.. காரணம் பாரம்பரிய ரக அரிசிகள் மற்றும் சிறுதானியங்கள்.

அங்கேதான் இருக்கின்றது உடல் நலத்துக்கான மருந்து... இயற்கையை போற்றுவோம் - இனிமையான வாழ்வை பெறுவோம்.

ஹெல்த் டிப்ஸ் by



ஜோ.பா. ராஜஸ்ரீ.

# காலநிலை மாற்றம் தொடர்பாக அரசியற் கட்சிகளின் திட்டங்களைத் தேர்தல் அறிக்கைகளில் உள்ளடக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணையத்திடம் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கோரிக்கை

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளைத் தேர்தல் அறிக்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான அவற்றின் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்குமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்த வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இலங்கைத் தேர்தல்கள் ஆணையத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



இதுதொடர்பாக தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தேர்தல்கள் ஆணையத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில், உலகம் இன்று எதிர்நோக்கும் தலையாய பிரச்சினைகளில் காலநிலை மாற்றமும் இதர சுற்றுச்சூழல் பிரச்சினைகளும் முதலிடத்தில் உள்ளன. நாடுகளில் நிலவும் வளப்பற்றாக் குறைவு, வறுமை, பஞ்சம், பட்டினி போன்றனவற்றின் அடிப்படைக் காரணங்களாகவும் இவை உள்ளன.

காலநிலை மாற்றங்களுக்கும் ஏனைய சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கும் நாடு எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும் என்பது தொடர்பாகத் திட்டங்களை வகுக்கவும், அவற்றை நிறைவேற்றவும் வேண்டிய கடப்பாடு அரசாங்கங்களுக்கே உரியதாகும். இவை தொடர்பாக ஏற்கனவே உலக நாடுகள் பலவும் விழிப்புணர்வு பெற்று வினைத்திறனுடன் செயலாற்றத் தொடங்கியுள்ளன.

இலங்கையும் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் உட்பட பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. இலங்கையின் நாளைய அரசாங்கத்தை இன்று தேர்தலில் ஈடுபடும் கட்சிகளே அமைக்கப் போகின்றன. அந்த வகையில், தேர்தல்களை நடாத்துகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கைத் தேர்தல்கள் ஆணையம் கட்சிகளுக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கவேண்டிய கடப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளைத் தேர்தல் அறிக்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான அவற்றின் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்குமாறு தேர்தல்கள் ஆணையம் அறிவுறுத்த வேண்டும் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அத்தோடு, தேர்தல் பொதுக்கூட்டங்களில் பிளாஸ்ரிக் கொடிகளையும், ஒருநாள் பாவித்து விட்டு வீசும் பிளாஸ்ரிக் குவளைகளையும் அறவே தவிர்க்குமாறு இறுக்கமாக அறிவுறுத்த வேண்டுமென்றும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
දෙමළ ජාතික හරිත සංවිධානය
Tamil National Green Organization
இல.109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
අංක 109, අරසඩි පාර, කන්දර් මඩම්, යාපනය.
No.109,Arasady Road, kantharmadam, Jaffna
greentamils5@gmail.com
0094 21 221 4641

07.10.2024

**The Chairman,**
The Election Commission of Sri Lanka
Sarana Mawatha,
Rajagiriya-10107

**Honourable Sir,**

**Inclusion of future plans of the political parties on climate change and other environmental issues in election manifesto**

Among the major issues facing the world today, climate change stands at the forefront, along with other pressing environmental concerns. These challenges are key contributors to the depletion of natural resources, poverty, famine, and starvation in many countries.

Governments have a critical responsibility to formulate and implement plans to address climate change and other environmental problems. Many Nations around the world have recognized the urgency of these issues and have begun to take effective action.

Sri Lanka, too, faces a range of environmental challenges, including the impacts of climate change. The future government of Sri Lanka will be formed by the parties participating in today's elections. As the body responsible for overseeing these elections, we believe the Election Commission has an obligation to issue guidelines encouraging political parties to prioritize environmental protection.

We respectfully request that the Election Commission instruct all political parties contesting in the upcoming parliamentary elections to include clear plans for mitigating climate change and addressing other environmental issues in their manifestos.

Additionally, we kindly ask that the Commission advise parties to avoid using plastic flags and disposable plastic cups during election campaigns and public meetings to further promote environmental responsibility.

Thank you for your attention to these crucial matters.

Sincerely,

**P.Ayngaranesan**
President
WhatsApp : 0775565460

பசுமைத் தேசத்தை நோக்கி
හරිත දේශයක් කරා
Towards a Green Nation

## தமிழ் மக்களின் எதிர்கால இருப்பை கேலிக்கூத்தாக்கும் தமிழ் கட்சிகள்- தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன்

தமிழ்த் தேசிய அரசியலை இனி எவராலும் காப்பாற்ற கூடிய வகையில் கண்ணுக்கெட்டிய தூ ரத்தில் தலைவர்கள் எவரும் தென்படவில்லை என்பதே பொய்யின் நிழல்படாத உண்மை என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக 9ம் திகதி புதன்கிழமையன்று ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.
குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,,,
தலைமையற்ற வெறுமைக்குள் சிக்கித் தவிக்கிறது தமிழினம் உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஐக்கியப்பட்டு குறைந்தபட்சம் தேர்தல் கூட்டாவது அமைத்திருக்கலாம்.

பதவி வெறியாலும் அதிகார திமிராலும், ஆணவச் செருக்காலும், ஆளுக்கு ஆள் தனி வழி சென்று தமிழ்த்தேசியத்தை இருப்பை கூறு போட கங்கனம் கட்டி நிற்கிறார்கள். இன விடுதலை அரசியலை முன்னெடுக்க கிஞ்சித்தும் அறச்சிந்தனை அற்ற பதவி சுகபோகிகள் மீண்டும் தமிழினத்தை கருவறுக்க முனைகிறார்கள்.

சிங்கள தேசம் காலத்துக்கு காலம் தமது இருப்பை தனதாக்க ஒரே நோக்கில் சிந்திக்கிறது தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் ஆளை ஆள் அகற்ற முனைகிறார்கள். உட்கட்சிகளின் ஊசலாட்டம் ஊரே சிரிக்கிறது. இவர்கள் எவரும் இனம் சாந்து சிந்திப்பதாக இல்லை. பல ஆண்டுகளாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் உருப்படியாக எதுவுமே சாதிக்கவில்லை .

தனது சுய இலக்கை மட்டுமே எட்டியுள்ளனர் இந்த தேர்தலிலும் போட்டியிட வெட்கம் மானம் ரோசம் சுய கௌரவம் தன்மான மின்றி தேர்தல் களத்திற்கு வருகிறார்கள். இவர்களுக்கு எதிராக சிவில் அமைப்புகள் தன்னார்வலர்கள் பரப்புரை மேற்கொள்ள வேண்டும். புதியவர்களில் வல்லவர்களை களத்திற்கு அனுப்புங்கள். தமிழ்த்தேசிய உணர்வும் தூய விசுவாசமும் இனப்பற்றும் இரண்டகமற்ற செயற்பாட்டர்களாக உள்ளவர்களை தெரிவு செய்யுங்கள்.

அதிகம் படித்தவர்கள் என்று கூறுபவர்கள் இந்த நாட்டை சீர்குலைத்தது இருக்கிறார்கள் .சட்டத் தரணிகளாலே தமிழர் அரசியல் படு பாதாளத்துக்கு சென்றது . தேசிய மக்கள் சக்தி என்பது வெறும் அரிதாரமே. . தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட வேண்டும் இல்லையேல் பலரது அரசியல் எதிர்காலம் கனவாகவே போய்விடும். குறைந்தபட்சம் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் போட்டித் தவிர்ப்பை மேற்கொள்வது அவசியமாகும்.

தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விகுறிக்குள்ளாகும் தமிழ்த்தேசிய அரசியல் சில சுயநலவாதிகளிடம் சிக்கி சின்னாபின்னமாகி தவிக்கிறது . கூட்டு ஐக்கியத்தை யே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். பல அணிகளாக பிரிந்து நிற்பதை தமிழ் மக்கள் ரசிக்கவில்லை. விரக்தியின் உச்சத்தில் உள்ளனர். தனித்தனியாக தேர்தலை சந்திப்பது என்பது முடிவில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலை இனி எவராலும் காப்பாற்ற கூடிய வகையில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தலைவர்கள் எவரும் தென்படவில்லை என்பதே பொய்யின் நிழல்படாத உண்மை.

பல அரசியல் வாதிகளை காலம் காணாமல் போக செய்யப் போகிறது என்பது மட்டும் புலனாகிறது. தமிழ் மக்கள் தேசமாக சிந்திக்கும் சூழலையே தமிழ்த்தேசிய கட்சிகள் இல்லமால் செய்து விட்டனர் என்பது கள யதார்த்தம் புரிந்து கொள்வர்களா?என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் மட்டுமல்ல, பல்கலைக்கழகங்களில் கூட கல்வியை தொடர முடியாமல் இடர்படுகின்ற மாணவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள் பேராசிரியர் வேல்நம்பி ஆதங்கம்!

இன்றைக்கு வறுமையின் காரணமாக பல மாணவர்கள் தங்களுடைய படிப்பை கைவிட்டு விடுகின்றார்கள். சாதாரணமான பாடசாலைகளில் மட்டுமல்ல, பல்கலைக்கழகங்களில் கூட கல்வியை தொடர முடியாமல் இடப்படுகின்ற மாணவர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உயர் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அதிதியாக கலந்து கொண்டு பிரதம விருந்தினர் உரை ஆற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் மற்றவர்களிடம் இருந்து உதவியை பெறுவது அவ்வளவு நல்லது இல்லை என்றாலும் கூட கல்வி கற்க வேண்டும் என்பதற்காக ஒருவரது உதவியை பெறுவது என்பது எந்த விதத்திலும் தாழ்வானது கிடையாது. மாறாக கல்வி கற்பதற்கு வறுமையினால் இடர்ப்படுகின்ற மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவி செய்வது என்பது இந்த உலகத்திலே இருக்கின்ற உன்னதமான கருமங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

ஆகவே வழியில்லாதவர்கள் உங்களுடைய கல்விக்கு கை கொடுக்கக் கூடியவர்களை தேடி கண்டுபிடிப்பதும், எங்கெல்லாம் தேவையில்லாமல் பணத்தை எறிகின்றார்களோ அவர்களெல்லாம் கண் வைக்க வேண்டிய இடம் இந்த கற்க முடியாமல் இடர்ப்படுகின்ற பிள்ளைகள் என்பதையும் ஞாபகம் வைத்துக் கொண்டால் எமது சமூகத்தின் உரிய இடத்திற்கு அந்த உதவி சென்று சேரும்.

அந்தக் கல்வியினால் எமது சமூகம் நிமிர்ந்து நிற்கும். நல்ல ஆளுமைகளை நாங்கள் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கும்.



பிச்சை புகினும் கற்கை நன்றே என்பதற்கு சில அறிஞர்கள் கூறியுள்ள விளக்கம் “நல்ல விடயங்களை பெற்றுக் கொள்ள வேண்டுமாக இருந்தால் அவரிடம் சென்று கெஞ்சி மன்றாடி, அவருடைய காலில் விழுந்தாவது அதனைப் பெற்றுக் கொள்” என்பதுதான் அங்கு சொல்லப்படுகின்றது. இதிலே எந்த தாழ்வு மனப்பாங்கும் எமக்கு இருக்க வேண்டிய தேவை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.


KT GROUP
An Integrated Facilities Management Services Provider
Providing eco-friendly commercial cleaning services in Ontario to promote sustainability and maintain a spotless environment.
GME GREEN MAPLES ENVIRONMENTAL
Offering top-tier security solutions to ensure the safety and protection of businesses and properties throughout Ontario.
TDSS TOP DEFENCE Security Services
Delivering comprehensive employment services to connect job seekers with employers and support workforce development.
ONTARIO EMPLOYMENT SOLUTIONS
Specializing in professional restoration services to repair and rejuvenate properties after damage from water, fire, mold, or other disasters.
ONTARIO RESTORATION SQUAD
+1-866-686-9660
2283 Argentia Rd., Unit 16, Mississauga, ON, Canada, L5N 5Z2


SPECTRONX TECHNOLOGIES
IT Services & Solutions
Empowering Brands Digitally
Web Development
WebApp Development
Search Engine Optimization
Social Media Management
Branding
Data Analytics
Digital Marketing
+1-437-213-9525
info@spectronx.ca


New Ranganas
Jeweellery
NEW RANGANAS JEWELLERY
SINCE 1996
$5,000 க்கு கொள்வனவு செய்வோரில்
10 பேருக்கு 5 பவுண் நகை
$3,000 க்கு கொள்வனவு செய்வோரில்
10 பேருக்கு 3 பவுண் நகை
$2,000 க்கு கொள்வனவு செய்வோரில்
10 பேருக்கு 2 பவுண் நகை
100 பவுண் நகை பரிசு
25TH MARCH
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
647-702-2159
6055 Steeles Ave E, Unit C102, Scarborough, ON M1X 0A7.
Markham & Steeles | Yellow Building

# அரச அதிபர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட வேதநாயகன் இப்போது வடக்கின் 'நாயகனாக' காட்சி தருகின்றார்.

ந.லோகதயாளன்

யாழ் மாவட்டத்தின் முன்னாள் அரச அதிபராக இருந்த நாகலிங்கம் வேதநாயகன் கோட்டபாய அரசின் காலத்தில் அங்கஜன் இராமநாதனால் இடமாற்றப்பட்டபோது பதவியை தூக்கி எறிந்துவிட்டுச் சென்றவர் இன்று மாகாணத்திற்கே ஆளுநராக பதவியேற்கின்றார்.

அளவெட்டியை சொந்த ஊராக்கொண்ட வேதநாயகன் 29 ஆண்டுகால அரச சேவையாற்றி ஓய்விற்கு 3 மாதகாலம் இருக்கும்போதே கோட்டபாய மற்றும் அங்கஜனால் அரசியல் பழிவாங்கப்பட்டார்.

இவரது அரச பணிக்காலம் என்பது ஆரம்பம் முதல் இறுதிவரையுமே போர்க் களத்தில் பணியாற்றிய நிலைமைதான் ஆட்சித் தரப்புடன் ஒத்துச்செயற்படாததால் அப்போதைய அரசினால் தூக்கியெறியப்பட்டார்.

தனது ஆரம்பக் கல்வியை அளவெட்டி சாந்த வித்தியாலத்தில் ஆரம்பித்த சிறுவன் வேதநாயகன், தரம் 3 வரையும் அங்கும். அதன்பின்னர் தரம் 8 வரையில் அருணோதயாக் கல்லூரியிலும் கற்றமையோடு க.பொ.த. உயர்தரம் வரையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் சுற்று பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானார்.

பல்கலைக் கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டப்படிப்பினை 1984இல் நிறைவு செய்த நிலையில் 1985ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற பின் 1985 முதல் 1966 வரை பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய சமயம். 1986 இல ஆசிரிய சேவையில் இணைந்து 1901ஆம் ஆண்டுவரையில் மல்லாவி மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் யாற்றினார். அதுதான் ஈழத்தில் இந்தியப்படையினர் நிலைகொண்டு போர் இடம்பெற்ற காலம்

1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி அரச நிர்வாகத்தில் பணியில் இணைந்து 1991ஆம் ஆண்டு மே மாதம் 03ம் திகதிவரையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் பயிற்சியினை நிறைவு செய்தார். இக்காலப் பகுதியில் பொது முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் முது மாணி ஆகிய பட்டங்களையும் பெற்றார்.

இவ்வாறுஅவர் பயிற்சிக் காலத்தை நிறைவு செய்து வெளியேறிய அச்சமயம் 2 ஆம் கட்ட ஈழப் போர் உச்சம் பெற்றிருந்த வேளை நெடுந்தீவுப் பிரதேச செயலகத்திற்கு 1991.05.04முதல் நியமிக்கப் பட்டார். அந்தக் காலத்தில் மண்டைதீவுபாலம் யாழ் கோட்டை மீதான தாக்குதல் காரணமாக முழுமையாக தகர்க்கப்பட்டிருந்தது. அதன் ஊடே பயணிக்க இரு பனைமரங்கள் மட்டுமே இணைப்பாகப் பயன் படுத்தப்பட்ட நிலையில் துவிச்சக்கர வண்டியில் சென்று குமுதினிப் பட்கின் மூலம் நெடுந்தீவிற்கு பயணிக்க வேண்டும். அப்போதும் ஊர்காவற்றுறையில் படையினர் நிலைகொண்டிருந்தனர்.

குறிகட்டுவானில் புலிகள், நயினாதீவில் கடற்படையினரிடம் என இரு தரப்புச் சோதனையை தாண்டியே நெடுந்தீவு பயணிக்க வேண்டும். இத்தனை நெருக்கடியின் ஊடாக பயணித்து நெடுந்தீவில 5 மாதங்கள் பணியாற்றிய நிலையில் மீண்டும் தீவகம் முழுமையாக படையினரின் கட்டுப்பாட்டில் வந்தபோது சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு அவர் இடமாற்றப்பட்டார்.

பின்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையில் தெல்லிப்பழை பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார். 1996 முதல் 2002.12.31 வரையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய போதே 2003.01.01 முதல் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். மேலதிக செயலாளராக பணியாற்றிய காலத்தில் அப்போதைய அரசாங்க அதிபர் இரசநாயகம் 2007-ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.



2007முதல் கிளிநொச்சி மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் இறுதி யுத்தம் காரணமாக பல நெருக்கடிகள், இடர்பாடுகள் உயிர் ஆபத்துக்களை கடந்தே பணியாற்ற வேண்டியிருந்தது. அதில் இருந்து தப்பி வவுனியா சென்றும் பணியாற்றியபோது, 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையில் பணியாற்றிய சமயம் இறுதி யுத்த காலத்தில் ஆற்றிய சேவைகள் தொடர்பான விசாரணை என்னும் பெயரில் பல தகவல்களை மறைக்க 2009.07.20 அன்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டு போதிய விசாரணையோ அல்லது எந்தவிதமான குற்றச் சாட்டுகளோ இல்லாது தடுதது வைக்கப்பட்டிருந்த நிலையில் 2010 ஜனவரி 10ல் விடுவிக்கப்பட்டு 2010.01.20 தொடக்கம் திரும்பவும் அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவ்வாறு அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் 2010ஆம் ஆண்டு ஜ/லை மாதம் மிகவும் நெருக்கடியான காலத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னார் மாவட்டத்திற்கு மாற்றபட்டு அதே ஆண்டு நவம்பர் மாதம் மீளவும் முல்லைத்தீவிற்கே இடமாற்றப்பட்டார.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றிய காலத்திலேயே 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பலரின் போட்டியின் மத்தியிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு அதாவது தனது சொந்த மாவட்டத்துக்கு செயலாளராகத் தெரிவாகி பதவி யேற்றார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டமை முதல் மாவட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் என்ன தேவை என்பதனை நன்கு அறிந்து அதே சிந்தனையாக இருந்தார். உறங்கும் நேரம் தவிர்ந்து ஏனைய நேரம் முழுமையாக மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் சிந்தித்த ஒருவர் என்றபட்டியயில் இடம் பிடித்தார்.

யாழ் மாவட்டத்தில் பணியாற்றிய சமயம் அரசியல் கட்சிகளை மட்டுமல்ல. சக பணியாளர்களில் கூட ஒரு சிலரை பகைக்க வேண்டி நேரும் எனத் தெரிந்தும் பொதுமக்கள் கோரும் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்தமையினால் சிலர் பகையை எதிர்கொண்டார். அவர் நினைத்திருந்தால் அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் பகைக்காது சென்றிருக்கலாம். லஞ்சம் கோரியோரை இடமாற்றாதிருந்திருந்தால். வேண்டுமென்றே மறுத்த வீட்டுத் திட்டத்தை நேரில் தலையிட்டு வழங்காதிருந்தி குந்தால், அரசியல்வாதிகளைத் திருபதிப்படுத்த பொருத்தமற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த தலையாட்டியிருந்தால், எஞ்சிய 3 மாதங்களும் பதவியில் நீடித்திருக்கவும் முடியும். சக உத்தியோகத்தர்களிடமும் நன்றிபாராட்டியிருக்கவும் முடியும்.

இதற்கும் அப்பால் எந்த மக்களும். எப்போதும் மாவட்டச்செயலாளரை சந்திகக முடியும் என்ற நிலைமையை யாழ்ப்பாணத்தில் உருவாக்கினார்.

இவரின் காலத்தில்தான் சில அரசியல் கட்சிகள். அல்லது எதிர்பார்ப்பில் இருந்தோர்.தமக்கு இவர் இசையவில்லை என்பதனால் இவர்மீது அரசியல் முத்திரையினையும் குத்தத் தவறவில்லை. இத்தனைக்கும் தாக்குப் பிடித்த நிலையிலேயே மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்தபோது கட்டாயமாக இடமாற்ற முயற்சிக்கப்பட்டதனால் பதவியை தூக்கியெறிந்து விடை பெற்றார்.

இவரது சேவைக் காலத்தில் அரச சேவை மட்டுமன்றி உதவி என நாடி வந்தவர்களிற்கு வாரி வழங்கிய இவரின் தனிப்பட்ட உதவிகள் இன்றும் தொடர்கின்றன. இதில் க. பொ.த உயர்தர மாணவர்கள் 15 பேருக்கான மாதாந்தம் தலா3 ஆயிரம் ரூபா உதவி. அதேபோன்று பல்கலைக் கழகத்திற்கு தேர்வான 150 மாணவர் களிற்கு உதவி ஏற்பாடு என்பன குறிப்பிடக்கூடியவை யாகும்.

இவ்வாறு சேவையாற்றிய நிர்வாக அதிகாரி அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டு. ஓய்வு பெறுவதற்கு பதவியை தூக்கியெறிந்தவருக்கு இன்று நேரடி அரசியல் பதவி கிட்டியுள்ளது. இதிலும் சாதிப்பாரா அல்லது சோதிப்பாரா என்பதே அவர் லுன் உள்ள சவால் அதனையே அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஏனெனல் எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையில் அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பிலே ஆனால் எமது நாட்டில் அரசியல் கலப்படமற்ற நிர்வாகத்திலே என்பதனால் அதற்காக காத்திருப்பவர்கள் பலர்..



# தமிழ் கனேடியர்களுக்கு எதிரான இலங்கையின் தலையீடு குறித்து 'கனடா- தமிழர்களுக்கான உரிமைகள் குழு' பரிந்துரைகளை வழங்கியது

கனடா ஒட்டாவா மாநகரில் உள்ள குழசநபைெ ஜவெநசகநசநஉெந ஊழஅஅைளளைழெ அமைப்பின் ஆணையாளருடனான தனிப்பட்ட சந்திப்புகளுக்குப் பிறகு, கனடா-தமிழ் உரிமைகள் குழு (டி.ஆர்.ஜி) வெளிநாட்டு குறுக்கீடு ஆணையத்தில் இருந்து உத்தியோகபூர்வநிலைப்பாடு வழங்கப்பட்டது மற்றும் பிற புலம்பெயர் அமைப்புகளுடன் ஒரு முக்கியமான பொது ஆலோசனைக் குழுவில் பங்கேற்றது. கனடாவில் புலம்பெயர் சமூகங்களின் விவகாரங்களில் வெளிநாட்டு தலையீட்டின் தாக்கத்தை இந்த குழு மேற்படி ஆணையாளருக்கு எடுத்துரைத்தது. மற்றும் இந்த சவால்களை கனடா எவ்வாறு திறம்பட எதிர்த்துப் போராட முடியும் என்பது குறித்த தகவலறிந்த நுண்ணறிவுகளையும் வழங்கியது.

அண்மையில் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது. சமர்ப்பிப்பின் போது, தமிழ் கனேடியர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் பயன்படுத்திய ஆபத்தான உத்திகளை தமிழர் உரிமைகள் குழு அடிக்கோடிட்டுக் காட்டியது, இதில் கண்காணிப்பு, மற்றும் தவறான தகவல் மற்றும் விசமப் பிரச்சாரங்கள் மற்றும் ஆர்வலர்களின் மிரட்டல் ஆகியவை அடங்கும். இந்த நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிராக செய்யப்பட்ட இனப்படுகொலை குற்றங்களுக்கு எங்கள் சமூகத்தின் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

மேற்படி ஆணையத்திற்கு தமிழர் உரிமைகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் பின்வருமாறு:-

இலங்கையின் இனப்படுகொலை குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட கமிஷனுக்கு தமிழர் உரிமைகள் குழு ஆறு முக்கிய பரிந்துரைகளை வழங்கியது. இலங்கை அதன் செயல்களுக்கான பொறுப்பை தவிர்க்கவோ அல்லது பொறுப்புக்கூறலுக்காக வாதிடும் கனேடிய குடிமக்களை அச்சுறுத்தவோ அனுமதிக்கக்கூடாது என்ற கட்டாயத்தை அவை வலுப்படுத்துகின்றன. பரிந்துரைகள்:




வெளிநாட்டு குறுக்கீடு குறித்த பொதுக் கல்வி: வெளிநாட்டு குறுக்கீடு அச்சுறுத்தல்களை அங்கீகரிக்கவும் பதிலளிக்கவும் சமூகங்களை மேம்படுத்துதல், அத்தகைய குறுக்கீட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க சட்டவாதிகளும் கிடைக்கக்கூடிய வளங்களை அறிந்திருப்பதை உறுதிசெய்கிறார்கள்.

மேம்பட்ட பொறுப்புக்கூறல்: தற்போதுள்ள பொருளாதாரத் தடைகளை வலுப்படுத்துங்கள் மற்றும் இலங்கை மாநில அதிகாரிகளுக்கு எதிராக கூடுதல் நடவடிக்கைகளை விதிக்கவும்.

சுயாதீன விசாரணைகளுக்கான ஆதரவு: ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு தொடர்ந்து ஆதரவளித்து, இலங்கை பொறுப்புக்கூறல் திட்ட ஆணையை வலுப்படுத்துங்கள்.

சர்வதேச நீதிமன்றங்களுக்கு பரிந்துரை: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) மற்றும் சர்வதேச நீதிமன்றம் (ஐ.சி.ஜே) ஆகியவற்றின் பரிந்துரைகள் மூலம் மனிதநேயம், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பானவர்களை பொறுப்புக்கூற வைக்க சர்வதேச சட்டத்தை மேம்படுத்துதல்.

உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துதல்: கனடாவில் உலகளாவிய அதிகார வரம்புக் கொள்கைகள் மூலம் போர் குற்றவாளிகளுக்கு எதிரான நேரடி நடவடிக்கையை ஊக்குவித்தல்

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் தேவைகளுக்கு தீர்வு காண வழி சமைக்கும் கனடா வர்த்தகர் கணேசன் சுகுமார்

தினமும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சைக்காகச் செல்லும் இலங்கையின் முக்கிய வைத்தியசாலையாகத் திகழும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் தேவைகளுக்கு தீர்வு காண வழி சமைக்கும் கனடா வர்த்தகர் கணேசன் சுகுமார் அவர்களுக்கு உலகெங்குமிருந்து பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் குவிந்த வண்ணம் உள்ளன.




கனடாவில் நீண்ட காலமாக பல்வேறு வர்த்தக முயற்சிகளில் கால் பதித்து நூற்றுக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வரும் கணேசன் சுகுமார் அவர்கள். கனடாவிலும் பல வைத்தியசாலைகளின் நிதித் தேவைகளின் போது உதவிகள் வழங்கி வருகின்றார் என்பதும் இரத்தம் சுத்திகரிப்பு செய்யும் இயந்திரங்களையும் பல தடவைகள் வழங்கியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலை யில் கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணம் வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியர்களின் வேண்டுகோளின் பேரில் கணேசன் சுகுமார் அவர்கள் தொடர்ச்சியாக நிதி உதவிகளை வழங்கியும் நேரடியாக யாழ்ப்பாணம் சென்றும் அவற்றை கையளித்தும் வருகின்றார்.



அந்த வகையில் சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண வைத்தியசாலையின் கண்சிகிச்சைப் பிரிவிற்கு 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்களை வழங்கினார். அதற்கு முன்னர் கடந்த வருடங்களில் இருதய சிகிச்சைப் பிரிவிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்ய 50 இலட்சம் ரூபாய்களை வழங்கினார்.

இந்த கையளிப்பு வைபவங்களில் திரு கணேசன் சுகுமார் சார்பாக இளங்கோ இரத்தினசபாபதி அவர்கள் கலந்து கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சுக்சி குரூப் கம்பனியால் 40 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தலைமையில் நேற்று புதன்கிழமை காலை நடைபெற்ற நிகழ்வின்போது வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு இந்த மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். போதனாவில் கண் சத்திர சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் தேவையாக உள்ளது என்று சுக்சி குரூப் கம்பனியின் தலைவர் கணேசன் சுகுமாரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய கணேசன் சுகுமாரின் ஏற்பாட்டில் அவரின் பிரதிநிதியாக வந்திருந்த இரத்தினசபாபதி இளங்கோவினால் வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மலரவனிடம் மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேபோன்று கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரும் சுக்சி குரூப் கம்பனியின் தலைவர் கணேசன் சுகுமாரால் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ தேவைக்காக ஐந்து மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் இரத்தினசபாபதி இளங்கோ தெரிவித்தார்.

இதேவேளை, இந்தக் கம்பனியின் தலைவரின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளுக்கும் பல்வேறு உதவிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன என்றும், இதுபோன்று எதிர்காலத்தில் மேலும் பல உதவிகளைச் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சுக்சி கம்பனியின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இம்மாதச் சிறுகதை! இம்மாதச் சிறுகதை! இம்மாதச் சிறுகதை!

# உள்ளங்கால் புல் அழுகை

ஸ்ரீரஞ்சனி

“மை நேம் ஸ் றோசி, வட்ஸ் யுவர் நேம்?” எனக் கேட்டு விட்டு அவ என்னைப்பாக்கிறா.

எனக்கு அவவைப் பாத்தவுடனை, எங்கடை ரீச்சர் மிசிஸ் ஜோன் ஸ்கூலுக்கு ஒரு நாள் வராமல் நிண்டபோது, வந்த அந்தச் சப்பிளை ரீச்சர்தான் ஞாபகத்துக்கு வந்தா.அந்த ரீச்சரின்ரை குரல் மாதிரி அவவின்ரை குரலும் வலு கடுகடுப்பாக இருந்தது.
அந்தச் சப்பிளை ரீச்சரை எனக்குப் பிடிக்கவேயில்லை. அம்மாவுக்கு அதைப் பற்றிச் சொல்லி அழுதபோது, “சரி, நாளைக்கு உங்கடை ரீச்சர் வந்திடுவா,” எண்டு
சமாதானம் சொன்னா. ஆனால், அந்தச் சப்பிளை ரீச்சர் பிறகும் கன நாள் வந்ததாலை நான் ஸ்கூலுக்குப் போகமாட்டன் எண்டு அம்மாவோடை அடம் பிடிச்சிருக்கிறன்.

நான் ஒண்டும் பேசாமல் நிற்கிறதைப் பார்த்ததும் அவவே தொடர்ந்து சொல்லுறா, “ஓ, யூ ஆர் நொட் றெடி ரு ரோக் ரு மீ யெற், தற்ஸ் ஓகே.”

“திஸ் ஸ் அபர்ணா, அபர்ணா திஸ் ஸ் றோசி,” என மாறிமாறி எங்களுக்குச் சொல்லிப்போட்டு என்னைப் பார்த்து, “றோசி வில் ரேக் கேயர் ஒவ் யூ, அன்ரில்
திங்ஸ் கெற் செற்றில்டு,” என்கிறா, என்னை றோசியிடம் கூட்டிக் கொண்டுவந்தடயானா. அவை சொல்லுற எதுவும் எனக்கு விளங்கேல்லை.

பிறகு டயானா என்னை அந்த வீட்டுக்குள்ளை கூட்டிக் கொண்டு போறா. அங்கைரண்டு பெரிய பிள்ளைகள் வட்டமான மேசை ஒண்டிலை இருந்து ஏதோ சாப்பிட்டுக்கொண்டிருக்கினம்.

“அபர்ணா, வுட் யூ லைக் ரு ஈற் சம் திங் ரூ?” எண்டு கேட்ட றோசிக்கு, “யேஸ், ஷிடின்ற் ஹாவ் ஹேர் டினர் யெற்,” என்று சொல்லிவிட்டு டயானா என்னைப் பார்த்து “ஜொயின் வித் தெம்,” என்கிறா.

நான் ரோபட் போல அசைந்து அசைந்து போய் சாப்பாட்டு மேசையிலை இருந்தாலும் எனக்குப் பசி கொஞ்சமும் வரேல்லை. ஒரே அழுகை, அழுகையாகத்தான் வருகுது.

மக்கரோனி அண்ட் சீஸ் எனக்குப் பிடிக்கிறதுமில்லை. அம்மா இடியப்பத்தை சொதியோடை குழைச்சுப் போட்டுத் தீத்த, அதைச் சாப்பிட்டுத்தான் எனக்குப் பழக்கம்.

அந்தச் சாப்பாட்டு மேசையில் இருந்து நான் அழுறதைப் பார்த்த அந்த ரண்டு பிள்ளையளும் தாங்கள் கதைச்சதை நிப்பாட்டிப் போட்டு என்னைப் பரிதாபமாகப் பாக்கினம். கொஞ்ச நேரம் கழிச்சு, ‘ஓகே, கம் அண்ட் சிற் வித் மீ’ எண்டு றோசி என்னைக் கூப்பிடுறா.

பிறகு டயானாவும் றோசியும் தங்களுக்குள்ளை கதைச்சபடி ஏதோவெல்லாம் எழுதிக்கொண்டினம். பிறகு டயானா போயிட்டா. “அபர்ணா, இற் ஸ் ஓல்மோஸ்ற் ரைம் ருகோ ரு பெட்” எனச் சொல்லி என்னைக் கூட்டிகொண்டு வந்து ஒரு அறையிலை விட்டிட்டுப் போட்டா றோசி.

அம்மான்ரை சூட்டிலை அம்மாவோடை படுக்கிறதிலை சுகம்கண்ட எனக்கு அந்தத்தனி அறையைப் பாக்க ஏதோ பயங்கரப் பூதத்தைப் பாக்கிறமாரி இருக்குது.
அம்மாவுக்கெண்டு ஒரு தனிவாசம் இருக்குது. “அம்மா, யூ ஸ்மெல் சோ குட்,” எண்டு அடிக்கடி சொல்லி அம்மாவை நான் இறுகக் கட்டிக்கொள்ளுவன். இப்ப இங்கை அம்மாவின்ரை சூடுமில்லை, மணமுமில்லை. எல்லாமே வெறுமையாக் கிடக்குது. நான் இங்கை, எங்கடை பேபி ஆற்றை வீட்டிலையோ தெரியாது. பேபியையும் என்னையும் சேத்துக் கவனிக்க றோசியாலை முடியாது எண்டுதான் என்னை மட்டும்
இங்கை கூட்டி வந்ததெண்டு டயானா சொன்னா.

இனி பேபியோடை விளையாடவும் ஏலாது “அபர்ணாக் குட்டி, பேபிக்கு பவுடர் எடுத்துக் கொண்டு வா. பேபி அழுகுது, பேபியோடை போய் விளையாடு”, எண்டெல்லாம் அம்மா சொல்லுறதைக் கேக்கவும் ஏலாது. எத்தினை நாளைக்கு இப்பிடியிருக்கப் போறன்? எப்ப அம்மா கதைக்கிறதைக் கேக்கப் போறன்?

பில்லோவைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு விம்மி விம்மி அழுகிறன் நான்.

அப்பாவுக்குக் கோவம் வந்தால் அவர் எப்பவும்தான் அம்மாவை அடிக்கிறவர். ஆனா, கடைசியா அப்பா அம்மாவோடை சண்டை பிடிச்சபோது பொலிஸ் வந்திட்டுது. அப்பான்ரை சத்தத்தைக் கேட்ட பக்கத்து வீட்டுக்காரர் பொலிசைக் கூப்பிட்டினமாம் எண்டு அம்மா ஷெல்ரருக்குப் போகேக்கை சொல்லி அழுதா.

கவலை வாறநேரமெல்லாம் என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டுதான் அம்மா அழுவா. இப்ப தனிய இருந்து அழுவாவோ?

இனி நான் எப்ப பேபியோடை விளையாடலாம்? அம்மாவை எப்ப பாக்கலாம்? பேபி பாவம். என்ன செய்யிறாவோ தெரியாது!



பொலிஸ் வந்து எங்களைக் கொண்டுபோய் ஷெல்ரரிலை விடேக்கை, எங்கடை வீட்டிலை இருக்காட்டிலும் பரவாயில்லை, என்ரை ரொய்ஸ் இல்லாட்டிலும் பரவாயில்லை, அம்மாவோடை இருந்தால் காணும் எண்டுதான் நான் நினைச்சன்.
பிறகு அம்மாவுக்கு வருத்தமாம். ஏதோ டிப்பிரஷனாம், அதாலை எங்களைப் பாக்க அவவாலை ஏலாது எண்டு எங்களை அவவிட்டையிருந்து பிரிச்சுப் போட்டினம்.
எங்களுக்கு எங்கடை அம்மா வேணுமெண்டு நாங்கள் எவ்வளவு அழுதும் அவைக்கு விளங்கேல்லை. தன்னாலை எங்களைப் பாக்கேலும் எண்டு சொல்லிச் சொல்லி அம்மாவும் அழுதா. ஆனால் ஆரும் அதைக் கேக்கேல்லை. எனக்கு இப்ப என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை, ஆரிட்டை போய்க் கதைக்கலாம்?

அவை சொல்லுகினம், அம்மாவுக்கு சுகம் வந்தாப் போலைதான் எங்களை அவவிட்டை விடுகிறதைப் பற்றி யோசிக்கலாமாம். அம்மா தனக்கு என்ன வருத்தம் எண்டாலும் ஒருநாள் கூட எங்களைக் கவனிக்காமல் விட்டதில்லை. உடுப்புத் தோய்க்கிறது, சாப்பாடு சமைக்கிறது, சாப்பாடு தாறது, ஸ்கூலுக்குக் கூட்டிக் கொண்டுபோறது எண்டு எங்களுக்கு எல்லாம் அம்மாதானே இவ்வளவு நாளும் செய்தவ. இப்ப அப்பாவை பொலிஸ் பிடிச்சாப்போலை என்னெண்டு அவவுக்கு அப்படி ஒரு பெரிய வருத்தம் திடீரெண்டு வந்ததெண்டு எனக்குத் தெரியேல்லை. இருந்தாலும், தான் எல்லாம் செய்வன் எண்டுதானே அம்மா சொன்னவ். அம்மா செய்யமாட்டா எண்டு இவைக்கு என்னெண்டு தெரியும்?

எனக்கு அம்மாட்டை போகோணும் போலையிருக்கு இவை எப்ப என்னைக் கூட்டிக் கொண்டு போவினம்? இனி வேறை ஸ்கூலுக்குத்தான் போகவும் வேணுமாம். மிசிஸ் ஜோனையும் இனிக் காணேலாது. புதுரீச்சர் சப்பிளை ரீச்சர் மாதிரி இருப்பாவோ அல்லது மிசிஸ் ஜோன் மாதிரி நல்ல ரீச்சரா இருப்பாவோ, ஆருக்குத் தெரியும்? என்ன இருந்தால்தான் என்ன, என்ரை அம்மாவே இல்லையாம், இனி நல்ல ரீச்சர் வந்தென்ன, விட்டென்ன?

றோசியும் என்னிலை பிழை பிடித்துக் கத்துவாவோ, என்னவோ. நான் ஏதேனும் பிழையாய்ச் செய்தால் அவவுக்குக் கோவம் வரும். பிறகு என்ன செய்வாவோ?
இதெல்லாம் அப்பாவாலைதான் வந்தது. எல்லாம் அவற்றை பிழைதானே!

அம்மாவுக்குப் பைத்தியம் எண்டு பேசிப்பேசி அவவோடை சண்டை பிடிக்கிறதுதான் அவருக்கு வேலை. அண்டைக்கும் அம்மா பேபியோடை சாய்ஞ்சாடம்மா பாடிக்கொண்டு இருக்கேக்கை ‘வீடு குப்பையாக் கிடக்குது’ எண்டு கத்தினார். தன்னாலை எல்லாம் தனியச் செய்யேலாது எண்டு அம்மா சொன்னது அவருக்குப் பிடிக்கேல்லை.

அவவின்ரை தலைமயிரைப் பிடிச்சு இழுத்து, அவவின்ரை தலையை சுவரிலை மோதி அடிச்சார். அதைப் பாத்து நானும் பேபியும் பெரிசாக் கத்தினதாலைதான் பக்கத்து வீட்டுக்குக் கேட்டிருக்குதாக்கும்.

அவை அப்பிடிப் பொலிசைக் கூப்பிட்டுக் குழப்பாட்டி, அப்பான்ரை கோபம் போனாப் போலை, எப்பவும்மாரி திரும்ப அம்மா அப்பாவோடை கதைச்சிருப்பா. அப்பா
கோவமாய் இல்லாத நேரங்களிலை அம்மா அவரோடை சிரிச்சுக் கதைப்பா. அதைப் பாக்க எனக்கு சரியான சந்தோசமாயிருக்கும். சண்டை பிடிக்காமல் எந்த நேரமும் அப்பாவும் அம்மாவும் அப்படிச் சந்தோசமாக இருக்கவேணும் எண்டு நான் எத்தினைதரம் ஆசைப்பட்டிருக்கிறன்.

இப்ப நான் என்ன செய்யலாம்? எப்பிடி அம்மாவிட்டைத் திரும்பப் போகலாம்? நான் சரியான குழப்படி செய்தன் எண்டால், றோசி என்ன செய்வா? தன்னாலை என்னைப் பாக்கேலாது எண்டு அம்மாவிட்டைக் கொண்டு போய் விட்டாலும் விடுவாதானே? அப்பிடித்தான் ஒருக்காச் செய்து பாக்கவேணும்.

நாளைக்கு ஏதாவது சாமனை உடைக்கவேணும். பிலத்துக் கத்தவேணும். இருக்கிற மற்றப் பிள்ளையளோடை சண்டை பிடிக்கவேணும். எப்பிடியாவது அவை என்னை அம்மாவிட்டைக் கொண்டு போறதுக்கு ஒரு வழி பாக்கவேணும்.

ஈரமாப் போன பில்லோவைக் இறுக்கிக் கட்டிப்பிடிச்சபடி கண்ணை மூடுறன்.

# நான் அனுமதிப்பத்திரம் விற்பனை செய்யவில்லை சிபாரிசுக் கடிதம் மட்டுமே வழங்கினேன் என்று மக்களை ஏமாற்றும் சி.வி.விக்னேஸ்வரன்

எஸ்.ஆர்.ராஜா

இலங்கையில் மதுபானசாலைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மதுபானசாலைகள் அதிகரிக்கும் போது அங்கு பாரிய குற்றச்செயல்கள் இடம்பெறுவதற்கான அடித்தளங்கள் திறக்கப்படுவதாகவே கருதவேண்டும். இம் மதுபானசாலைகள் திறக்கப்படும் இடம் தொடர்பான முன்னர் பல வரையறைகள் காணப்பட்டன. அதாவது பாடசாலைகள் ஆலயங்கள். பொதுநிறுவனங்கள் போன்ற முக்கிய நிறுவனங்களுக்கு அருகில் இவை அமைக்கப்படடக் கூடாது என்பது பொதுவான விதிமுறை.

இத்தகைய விதிமுறைகள் முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் மதுபானசாலைகள் அமைப்பதற்கான அனுமதியானது வழங்கப்பட்டு வருகின்றமையினால் அத்தகைய மதுபானசாலைகளை நிறுவுதற்கான இடம் தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதாக தெரியவில்லை. இதன் காரணமாக குடிமனைகள் பாடசாலைகள் வணக்கஸ்தலங்கள் என எவற்றினையும் கருத்தில் கொள்ளாது தமக்கு பிடித்த இடங்களில் எல்லாம் மதுபானசாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது அரசியல் மயப்படுத்தப்பட்டுக் காணப்படுவதால் எவராலும் எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாது காணப்படுகின்றமை உண்மையே.

அண்மையில் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற அனுரகுமார திஸநாயக்க அவர்கள் அண்மையில் தேர்தலில் வெற்றி பெறும் நோக்குடன் அரசியல் வாதிகளை வளைப்பதற்காக வழங்கப்பட்ட அனைத்து மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களும் இரத்துச்செய்யப்பட வேண்டும் என அறிவித்ததைத் தொடர்ந்து பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அதுமட்டுமன்றி பல்வேறு அரசியல் பிரமுகர்களும் இவ் அனுமதிப்பத்திரங்களைப் பெற்று பாரிய தொகையினை வருமானமாக ஈடவட்டியுள்ளதுடன் சிபார்சுக் கடிதம் வழங்கி பணம் பெற்றுள்ளமையும் வெளியாகியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் இதுவரையில் 180 இற்கும் மேற்பட்ட மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது அந்தவகையில் இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகளவான மதுபானசாலைகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தவகையில் மலையகத்தில் தேர்தல் காலங்களில் அதிகளவான புதிய மதுபானசாலைகள் உருவாக்கப்பட்டதாகவும் இவற்றை தடுக்குமாறு பொதுமக்கள் - நலன்விரும்பிகள் அரசியல் வாதிகளை கேட்டுக்கொண்டபோது அது கொழும்பு அரசாங்கத்தின் தீர்மானம் அதை நாம் எதுவும் செய்ய முடியாது என்று கூறி நழுவிச் சென்றார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலின் பின் அனுரகுமார திஸ நாயக்க வெற்றி பெற்ற பின் புதிய மதுபானசாலை தொடர்பான அரசியல் வாதிகளின் தலையீடுகள் அனைத்தும் வெளியில் வந்துள்ளன.

அத்துடன் வடக்குக் கிழக்கில் பல அரசியல் வாதிகளும் இவ்வாறு மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை பெற்று அவற்றின் மூலம் பணம் சம்பாதித்த விடயம் தற்போது ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கியுள்ளது. அந்தவகையில் தேர்தல் காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் அவர்களின் பெயரில் கிளிநொச்சி பரந்தன் சந்தியில் மதுபானசாலை ஒன்று உள்ளதாக செய்தி வெளியாகி பின்னர் அது பொய்யான தகவல் என்று அவர் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அதேபோல் அண்மையில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமன சி.வி விக்னேஸ்வரனினால் கிளிநொச்சியில் வழங்கப்பட்டுள்ள மதுபானசாலை அனுமதி பத்திரங்களில் அவரின் கோட்டாவில் வழங்கப்பட்டுள்ளதாக சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. இந்த விடயம் தொடர்பாக பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தது.

குறித்த சர்ச்சைக்குரிய கருத்துத் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்ட சி.வி.விக்னேஸ்வரன் இவ் மதுபானசாலை அனுமதி பத்திரத்தினை தாய் தந்தை அற்ற ஒரு பெண்மணிக்கே பெற்றுக் கொடுத்தேனே அன்றி நான் எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

இதேவேளைஈபவ் கிளிநொச்சி மாவட்டத்தின் கரடிப்போக்குச் சந்தியில் இயங்கும் மதுபான சாலை ஒன்றுக்கான அனுமதி வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஊடாகப் பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மதுபானசாலைக்கான அனுமதி ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் மக்கள் பிரதிநிதிகள் பலருக்கு சட்டவிரோத மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



அந்தவகையில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் சிபார்சின் அடிப்படையில் மதுபானசாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக ஆதாரத்துடன் தகவல் வெளியாகியுள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அங்கஜன் இராமநாதனின் தந்தையின் சிபார்சின்பேரிலும் ஒரு மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்பட்டதற்கான கடிதம் கூட வெளிவந்திருந்தது. இவ்வாறு ஒவ்வொருவர் தொடர்பாகவும் நாளுக்கு நாள் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்தவகையில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுக்குக் கிடைக்கும் கோட்டாக்களை மக்களின் நலன்களுக்காக பயன்படுத்தாது தமது தனிப்பட்ட வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் நோக்குடனேயே செயற்பட்டு வந்தார்கள். இதேவேளை கடந்த புதன்கிழமை 02.10.2024 அன்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஆட்சியில் மதுபானசாலை உரிமைப் பத்திரங்களை பெற்று வழங்கிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்ஈபவ் அரசியல்வாதிகள் அனைவரது பெயர்களையும் தற்போதைய அரசு உடனடியாகப் பகிரங்கப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அறிக்கை விரைவில் வெளிவந்தால் எந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது அரசியல்வாதிகள் சிபாரிசு செய்து அதிகூடிய மதுபானக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்பது மக்களுக்குத் தெரிய வேண்டும் எனவும் அது உடனடியாக அதுவும் தேர்தலுக்கு முன்னர் வழங்கப்படவேண்டும் எனவும் அவ்வாறு வழங்கப்பட்டாலே மக்கள் அரசியல் வாதிகளின் முகத்தினை இனங்காண முடியும்.

தற்போதைய ஜனாதிபதி எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகளில் ஒன்றாக இது கருதப்படவேண்டியுள்ளது. எனெனில் இவ்வாறு மதுபானசாலை அனுமதிப்பத்திரம் தொடர்பான சர்ச்சை வெளியாகிக் கொண்டிருக்கும் போது மதுபானம் தொடர்பான மற்றொரு அதிரடி நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளார்.

பெருந்தொகையான வரியை செலுத்தாத மதுபானசாலை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையானநடவடிக்கைஎடுக்கும்படிஈபவ்ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க உத்தரவிட்டுள்ளதாக இலங்கை மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய மதுபான ஆலைகளுக்கு இனி அனுமதி இல்லை என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

மதுபான சாலைகளின் வரி நாட்டுக்கு முக்கியமானது இவ் வருமானத்தின் அடிப்படையில் பாதிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும். அந்தவகையில் 2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வரி நிலுவையாக 1.8 பில்லியன் உள்ளதாக குறிப்பிட்ட அவர் நிலுவைத் தொகையை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தாத மதுபான உற்பத்தியாளர்களின் 2025 ஆம் ஆண்டிற்கான உரிமத்தை நீட்டிக்க வேண்டாம் என்று ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நின்று விடாது நிலுவைத்தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாத மதுபான உற்பத்தியாளர்களின் 2025 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்த அவற்றை புதியவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஒட்டுமொத்தத்தில் ஜனாதிபதி எடுத்துள்ள இன் நடவடிக்கையானது நாட்டின் மதுபானம் தொடர்பான சில சட்டவிரோத செயற்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வருவதுடன் மக்களுக்கு பல்வேறு நன்மைகளை அது பெற்றுக் கொடுப்பதாக உள்ளது.

இந்தவகையில் மதுபானங்களின் குடியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட அத்துடன் துன்பத்தை அனுபவிக்கும் பெரும்பாலான மக்களின் வாக்குகள் ஜனாதிபதிக்கு பலம் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

ஜனாதிபதி மேற்படி மதுபானசாலை தொடர்பான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டவர்களின் பெயர்கள் வெளிவந்ததும் தமிழ் மக்கள் பொதுவாக வடக்குக் கிழக்கில் உள்ளவர்கள் தமது அரசியல் தலைமைகளில் நிலைமை தொடர்பாக அறிந்து கொள்ளலாம்.

வடக்குக் கிழக்கில் உள்ள மக்கள் இம்முறை தேர்தலில் ஊழல்வாதிகள் சுயநலவாதிகள் மற்றும் பெரும்பாண்மை இன ஊழல் வாதிகளுக்கு சாமரம் வீசும் நபர்களை இனங்கண்டு நிராகரிப்பதுடன் இளமைத் துடிப்பும் இனப்பற்றும் சிறந்த கல்விப் பின்புலமும் அரசியல் சார்பான அறிவினையும் உடைய நபர்களை இனங்கண்டு அவர்களின் இலக்கத்திற்கு வாக்களிப்பதன் மூலம் எம் மக்களை விற்றுப் பிளைப்பு நடத்தும் அரசியல்வாதிகள் சுயநலவாதிகளை நிராகரிக்க முடியும் என்பது உண்மையே.

# ஆண்கள் எவரும் துணியாத நிலையில் சுமந்திரனின் சூழ்ச்சியை பகிரங்கப்படுத்திய ‘தமிழரசின் வடக்கு கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் அணி

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தலில் “வீட்டுக்குள்” ஏற்பட்ட மோதல் இலங்கை தமிழரசுக்கட்சி என்ற குடும்பத்தின் ஒற்றுமையை,பலத்தை ,நம்பகத் தன்மையை ,எதிர்பார்ப்பை சீரழித்ததுடன் , அதனைத் தொடர்ந்து இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதில்போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவில் இடம்பெற்ற சர்வாதிகாரம் மற்றும் பழிவாங்கல்களினால் தமிழரசுக்கட்சி குடும்ப உறுப்பினர்கள் வீட்டை விட்டு வெளியேறி வருவதனால் ‘வீடு”காலியாகி வருகின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் சிறீதரனிடம் படுதோல்வியடைந்த சுமந்திரன் அந்த தோல்வியை தாங்க முடியாது ‘எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு இரு கண்களும் போகவேண்டும்”என்ற சிந்தனையில் தமிழரசுக்கட்சிக்குள் “தடுமாறும்” மூத்த தலைவரையும் தனது “அல்லக்கை “செயலாளரையும் வைத்துக்கொண்டு நடத்திவரும் ஈகோ.சர்வாதிகார சதிராட்டத்தினால் தான் இன்று தமிழரசுக்கட்சி இருந்த இடம் தெரியாமல் போகும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் சுமந்திரனின் சஜித் ஆதரவு முடிவை ஏற்காத கட்சி விசுவாசிகளும் தமிழின உணர்வாளர்களும் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் தெரிவில் பழிவாங்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு சுமந்திரனின் விசுவாசிகளும் அல்லைக்கைகளும் மதரீதியானவர்களும் உள்வாங்கப்பட்டு வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டதில் சுமந்திரனின் சர்வாதிகாரம் தலைதூக்கியிருந்த நிலையிலேயே கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் வீட்டிலிருந்து வெளியேறி வருகின்றனர்.தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி வேட்பாளர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன் ,எம்.ஏ.சுமந்திரன், எஸ். சி.சி.இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இமானுவல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் சிறீதரனைத் தவிர மிகுதிப் பேர் சுமந்திரன் விசுவாசிகள்.

இந்த வேட்பாளர்கள் தெரிவு தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் அறிவிக்கையில்,யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனும் நானும் போட்டியிடுவதுடன், ஏனைய 7 பேரும் புதியவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.இவர்களில் இருவர் பெண் வேட்பாளர்கள். மிகவும் துடிப்பான இரு பெண்களையும் இம்முறை நிறுத்தியுள்ளோம். பெண் வேட்பாளர்கள் தேவை என நாம் ஊடகங்களில் தெரிவித்தோம். பெண் வேட்பாளர்களுக்கு காடு மேடு.மலையென அலைந்தோம். இறுதியில் எமது கோரிக்கையைப் பார்த்து இருவர் காலை விண்ணப்பித்தனர்.(வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட தினம்)அவர்கள் இருவருக்குமே வாய்ப்பை கொடுத்துள்ளோம் எனக் கூறியிருந்தார்.

அதேபோன்றே மட்டக்களப்பு மாவட்டத்திலும் வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மற்றும் ஞா.சிறிநேசன் எமது கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன், மட்டு மாநகர முன்னாள் மேயர் தி.சரவணபவன், வைத்தியர் சிறிநாத் உள்ளிட்ட ஐவர் இறுதி செய்யப்பட்டுள்ளனர். ஏனைய மூவரையும் மாவட்ட கிளையுடன் கலந்துரையாடி இறுதி செய்வோம். வன்னி, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட பட்டியல் இறுதி செய்யப்படவில்லை எனவும் அப்போது தெரிவித்திருந்தார்

சுமந்திரனைப் பொறுத்தவரையில் வடக்கில் தனதும் கிழக்கில் தனது விசுவாசியான சாணக்கியனதும் வெற்றிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்தான் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் நியமனங்கள் இடம்பெற வேண்டுமென்பதில் சகுனித்தனத்துடன் செயற்பட்டுள்ளார் என்பது வேட்பாளர்கள் பட்டியலை பார்க்கும் போது அப்பட்டமாக வெளிப்படுகின்றது. யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் சிறீதரனை வேட்பாளர் பட்டியலில் இணைக்காமலிருக்க சுமந்திரன் தலைகீழாக நின்றபோதும் சிறீதரனின் வாக்குப்பலம் காரணமாக அது முடியாத நிலையிலேயே அவரை மட்டும் பட்டியலில் சுமந்திரன் இணைத்துள்ளார். அதேவேளை சிறீதரனை தோற்கடிப்பதற்கான “உள்வீட்டு” சூழ்ச்சிகளையும் செய்துள்ளார்.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான பெண் வேட்பாளர் தெரிவு சர்வாதிகாரமான முறையிலே நடைபெற்றிருக்கின்றது. எல்லா விடயங்களிலும் தனித்து ஒற்றையாளாக முடிவெடுகின்ற சுமந்திரனின் ஆட்டம் இனி முடிவுக்கு வரும் என்று தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணி எச்சரிக்கை விடுத்து சுமந்திரனின் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் தெரிவு சர்வாதிகாரத்தனமாக இடம்பெற்றுள்ளது என்பதனையையும் பெண் வேட்பாளர்கள் தொடர்பில் சுமந்திரன் தெரிவித்த கருத்து அப்பட்டமான பொய் என்பதனையும் வெளிப்படுத்தியுள்ளது தமிழரசுக் கட்சியின் மகளிர் அணியின் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து ஊடக சந்திப்பை நடத்தியே வேட்பாளர் தெரிவில் நடந்த சுமந்திரனின் சூழ்ச்சியை பகிரங்கப்படுத்தியுள்ளனர்.




“எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள பெண் வேட்பாளர் தெரிவில் கட்சியின் மகளிர் அணிக்கு கடும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. உண்மையில் எதற்காக இவ்வாறான தெரிவுகளைச் செய்தார்கள் என்ற சந்தேகமும் கேள்வியும் இருக்கின்றது. இந்த பெண் வேட்பாளர் தெரிவு சர்வாதிகாரமான முறையிலே நடைபெற்றிருக்கின்றது. இதனால் கட்சியில் உள்ள பெண்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.பாராளுமன்றத் தேர்தலில் யாழில் போட்டியிடுவதற்காக மகளிர் அணியில் இருக்கின்ற ஐந்து பேர் இரண்டு கிழமைக்கு முன்னதாகவே விண்ணப்பித்திருந்தனர். ஆனால், வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட சுமந்திரன் பெண்கள் விண்ணப்பிக்கவில்லை என்றும், காடுகள், மலைகள், மேடுகள், பள்ளங்கள் என பல இடங்களிலும் பெண்களைத் தேடுவதாகவும் தனது பாணியில் கிண்டலாகச் சொல்லியிருந்தார். எதற்காக அவர் உண்மையைச் சொல்லாமல் பொய் சொல்லுகின்றார் ?

எங்களில் பல பேர் போட்டியிட விண்ணப்பித்து இருக்கையில் அதனை மறைத்துவிட்டு தனக்கு துதிபாடுபவர்களை வேட்பாளர்களாக சுமந்திரன் நிறுத்தியுள்ளார். அப்படியாயின் முதலில் விண்ணப்பித்த நாங்கள் யார்? இப்போது சுமந்திரன் தெரிவு செய்த இருவரும் யார்? எந்த அடிப்படையில் அவர்களைச் சுமந்திரன் தெரிவு செய்தார்? இந்த இரு பெண் வேட்பாளர்களின் தெரிவு என்பது தன்னிச்சையாக சுமந்திரனால் மட்டுமே செய்யப்பட்டுள்ளது.இதற்கு யாருடைய ஒப்புதலும் இன்றி தனக்குத் துதிபாடு பவர்களைத் தனது வாக்கு வங்கிக்காக அவர் தெரிவு செய்துள்ளார்.எங்கள் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக இந்த இருவரையும் சுமந்திரன் நியமித்துள்ளார். முன்னர் விண்ணப்பித்தவர்களை புறந்தள்ளி தனக்குத் துதிபாடிக் கொண்டு தன்னோடு பயணிக்கக்கூடிய இரண்டு கொத்தடிமைகளை வேட்பாளர்களாகச் சுமந்திரன் நியமித்துள்ளார்.” என்று இந்த ஊடக மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் மகளிர் அணித் தலைவி குற்றம்சாட்டியுள்ளார் .இந்தக் குற்றச்சாட்டுக்கு சுமந்திரனிடமிருந்து இன்றுவரை பதிலில்லை.

இந்த இரு பெண் வேட்பாளர்கள் தொடர்பில் இன்னொரு சந்தேகமும் உள்ளது. அதாவது “பெண் வேட்பாளர்களுக்கு காடு மேடு.மலையென அலைந்தோம். இறுதியில் எமது கோரிக்கையைப் பார்த்து இருவர் காலை விண்ணப்பித்தனர். அவர்கள் இருவருக்குமே வாய்ப்பை கொடுத்துள்ளோம் இந்த இருவர் பெண் வேட்பாளர்களும் மிகவும் துடிப்பானவர்கள் என சுமந்திரன் கூறியிருந்தார். காலையில் விண்ணப்பித்தவர்களை உடனடியாகவே வேட்பாளர்களாக நியமித்த சுமந்திரனுக்கு அவர்கள் மிகவும் துடிப்பானவர்கள் என்பது எவ்வாறு தெரியும்.?அவ்வாறு முதலிலேயே தெரிந்திருந்தால் அவர்கள் பெயர்களை முதலிலேயே சுமந்திரன் பிரேரித்திருக்கலாம்தானே ?அடுத்ததாக யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் இம்முறை தமிழரசுக்கட்சிக்கு ஒரு ஆசனமே கிடைக்கக்கூடிய அரசியல் கள சூழலில் தனது போட்டியாளரான சிறீதரனின் வாக்குகளை சிதறடிக்கவே அவரின் பெயருடன் கூடிய கிருஸ்ணவேணி சிறிதரன் என்ற வேட்பாளரை சுமந்திரன் தெரிவு செய்துள்ளதாகவும் ஒரு குற்றச்சாட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவு தொடர்பில் சுமந்திரன் கூறுகையில், இம்முறை ஏற்கனவே தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு இடம் வழங்கவில்லை என்று கூறியுள்ளார். அவ்வாறானால் ஏற்கனவே போட்டியிடாத கட்சியின் முக்கியஸ்தரான ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி தவராசாவின் வேட்பாளர் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது ஏன்?தனது வேட்பாளர் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பதவி மற்றும் பொறுப்புக்களில் இருந்தும் விலகுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அறிவித்துள்ளார் .இதன்படி, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் பதவி, இலங்கை தமிழரசுக் கட்சியின் சட்டக் குழு தலைவர், மத்திய குழு உறுப்பினர் ஆகிய அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சட்டத்தரணி தவராசா விடுத்துள்ள அறிக்கையில், தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போது அதில் யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தினுடைய மற்றும் கொழும்பு வாழ் மக்களினுடைய கோரிக்கைக்கு அமைவாக தான் விண்ணப்பத்தை கொடுத்திருந்ததாகவும், அதனை எந்தவொரு காரணமும் இல்லாமல் சுமந்திரன் நிராகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.மேலும், சுமந்திரன் தான் சார்ந்த அணியை வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்து கட்சிக்காக தொடர்ச்சியாக பாடுபடுகின்ற மிக முக்கியமான திறமைசாலிகளை உள்ளெடுக்காததன் அடிப்படையிலும் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த மக்களுக்கு பொறுப்புச் சொல்ல முடியாத ஒரு கட்டத்தினால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வீரத்தின் பால் வழிநடத்தப்பட்ட கட்சி இன்று சோர்விழந்து சோரம் போகின்ற ஒரு ஆபத்தான நிலையில் இருக்கின்ற படியினால் அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் நான் விலகுகின்றேன்.தமிழ் தேசிய விரோதிகளின் கைகளுக்குள் சிக்குண்ட தமிழரசு கட்சியில் தொடர்ந்தும் பயணிப்பது பொருத்தமற்றது என்பதால் இந்த முடிவு எட்டப்படுகிறது. தனிநபர்களின் தன்னிச்சையான போக்குக்குள் சிக்குண்டு தமிழரசு கட்சி சின்னாபின்னமாகி இருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் தமிழரசு கட்சியில் பயணிக்க முடியாது. தேசியத்தை கண்முன்னாலே குழி தோண்டி புதைக்கின்ற செயற்பாடுகளுக்கு துணை போகின்ற வரலாற்று துரோகத்தை நான் செய்ய தயார் இல்லை என்பதால் தமிழரசு கட்சியிலிருந்து விலகிக் கொள்கிறேன்.தமிழ் தேசியத்தை உரிய பலத்துடன் நிலைநாட்ட என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதற்குண்டான வழிவகைகள் குறித்து எதிர்காலத்தில் சிந்திப்பதற்கு முடிவெடுத்துள்ளேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிவிப்பினை தொடர்ந்து சட்டத்தரணி தவராசா,முன்னாள் எம்.பி. சரவணபவன் ,முன்னாள் வடக்கு மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் உள்ளிட்டவர்கள் ஜனநாயக தமிழரசுக் கூட்டணி என்ற பெயரில் சுயேட்சையாக களமிறங்குகின்றனர்.

தவராசாவைப் போன்றே தமிழரசு கட்சிக்காக பலவழிகளிலும் தம்மை அர்ப்பணித்து செயற்பட்ட சட்டத்தரணிகள் உள்ளிட்ட பலரும் தமிழரசுக் கட்சியில் இருந்தும், இதுவரை தமிழரசுக் கட்சிக்கு வழங்கி வந்த ஆதரவில் இருந்தும் விலகிக் கொள்வதாகவும் தமிழரசுக் கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் செயல்படும் சிலர் கட்சிக்குள் இருக்கும் வரை மீண்டும் கட்சியோடு இணைந்து செயற்படப் போவதில்லை என்றும் அறிவித்துள்ளனர். இவர்கள் எல்லோருக்கும் மேலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுவதாக மாவை சேனாதிராஜா அறிவித்ததுடன் கட்சியின் தலைவர் பொறுப்பை உடனடியாக ஏற்குமாறு கோரி கட்சியின் உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இவ்வாறு பழம்பெரும் கட்சியும் தமிழர்களின் தாய் கட்சியுமான தமிழரசுக் கட்சி “சாத்தான்”புகுந்த வீடாக மாறியுள்ளதால் அந்த சாத்தான் வீட்டிலிருந்து பலரும் வெளியேறுகின்றனர். இதனால் தமிழரசுக்கட்சி மட்டுமல்ல தமிழ் தேசியத்தின் பலமும் அழிக்கப்படுகின்றது. ஆயுத ,அரசியல் பலத்தில் அசைக்க முடியாதவர்களாகவிருந்த தமிழினம் காட்டிக்கொடுப்புகளினால் ஆயுத பலத்தை இழந்த நிலையில் தற்போது “உள்வீட்டு சதி” களினால் அரசியல் பலத்தையும் இழந்து வருகின்றது.

# இலங்கையின் தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனா 20 வயது, 17 வயது இரு அணிகளும் சாம்பியன்களாயின

இலங்கையின் தேசியமட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் 17, 20 வயது அணிகள் இரண்டும் சாம்பியன்களாகி கல்லூரிக்கு பெருமைசேர்த்துள்ளன.

செல்வி குயின்சி தலைமையிலான 20 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் பொலனறுவை பெண்டிவெல கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது.

லயன்சிகா, குயின்சி தலா இரு கோல்களை பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சாம்பியனாகியது.

உமாசங்கவி தலைமையிலான 17 வயது மகாஜனா பெண்கள் அணி இறுதியாட்டத்தில் குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரியை எதிர்கொண்டு 4:0 என்ற கோல்கள் கணக்கில் பெரு வெற்றிபெற்றது.

உமாசங்கவி (2 கோல்கள்) , கல்சிகா (1 கோல்) கியூஸ்ரிகா (1 கோல்) ஆகியோர் கோல்களை பெற்றுக்கொடுக்க மகாஜனா 4:0 என சாம்பியனாகியது.

17 வயதுப் பெண்கள் அணி தொடர்ச்சியாக 2022, 2023, 2024 என 3 வருடங்கள் சாம்பியனாகி வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு 17 வயதுப் பெண்கள் அணிக்கு 2022 ஆம் ஆண்டுதான் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் வெற்றி வாகை சூடிவருவதும் இவ்வாறான வெற்றிகளுக்கான காரணகர்த்தாக்களாக கல்லூரி அதிபர் மற்றும் உதைப்பந்தாட்ட பயிற்சி ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள் ஆகியோரே என்று பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.






# Canadian High Commissioner for Sri Lanka meets Representatives of Fishing Communities of Islands in Northern Sri Lanka

## இலங்கைக்கான கனடிய தூதுவர் வடபகுதி தீவக மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்

இலங்கையின் வட பகுதியில் உள்ள சப்த தீவுகளில் சுமார் 1,500 மீனவர்கள் உள்ளனர் ஆனால் அவர்களுக்காக ஒரு எரிபொருள் நிலையம்கூட இல்லாதமை மீனவர்களின் பெரும் பிரச்சனையாக காணப்படுவதாக இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் (நுசளை றுயடளா) அவர்கள் கடந்த 14-10-2024 அன்று யாழ்ப்பாணம் தீவகப் பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் மற்றும் தீவக பெண்கள் வலையமைபின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்.புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் சனசமுக நிலைய மண்டபத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளால் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது கடல் கடந்த தீவுகளான நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்றவற்றின் முக்கியமான வாழ்வாதாரமாக கடற்றொழிலே காணப்படுகின்றது. இங்கே சுமார் 1,500 மீனவர்கள் கடல் தொழிலை நம்பியுள்ளபோதும் ஒரு எரிபொருள் நிலையம்கூட இல்லாதமை மீனவர்களின் பெரும் பிரச்சணையாக காணப்படுவதோடு தீவை அண்மித்த கரையிலும் எரிபொருள் நிலையம் இல்லை.

இதேநேரம் அதிக மழை, புயல் போன்ற இயற்கைச் சீற்றம் ஏற்பட்டால் படகுகளை நங்கூரம் பாச்சி பாதுகாக்கவும் ஒரு துறைமுக வசதிகிடையாது,

இதேநேரம் தீவுகளில் நெடுந்தீவில் ஒரு நோயாளர் காவு படகுச் சேவையே காணப்படுகின்றது இது ஏனைய தீவுகளிற்கும் விரிவுபடுத்துவதே தீவக மக்களின் நிலையான வாழ்வியலிற்கு உறுதுணையாக அமையும் போன்ற விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டது.
இச் சந்திப்பில் வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா, மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்ச்சன் பிகிராடொ, தீவக பெண்கள் வலையமைப்பினர், தீவக பகுதி கடற்றொழில் அப்புக்களில் நெடுந்தீவு சமாசத் தலைவர்

யூலியான் குரூஸ், நெடுந்தீவு,நயினாதீவு, அனலைதீவு பிரதேச மீனவ பெண்கள் அமைப்பைச் சேர்ந்த மூவர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்







# கனடாவில் நடைபெற்ற புதுவைப் பேராசிரியர் மு. இளங்கோவன் அவர்களின் முத்தான மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

புதுவைப் பேராசிரியரும் இலங்கையில் பிறந்து தமிழ்நாட்டிலும் நன்கு அறியப்பெற்றவராக இருந்த விபுலானந்த அடிகளாரின் மீது தீராத பற்றும் பக்தியும் கொண்டு அன்னார் தொடர்பான ஆய்வுப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் பெருமகனுமாகிய மு. இளங்கோவன் அவர்களின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை 23ம் திகதி கனடா- ஸ்காபுறோவில் நடைபெற்றது.

பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவிற்கான ஏற்பாடுகளை மருத்துவரும் பேச்சாளரும் எழுத்தாளருமான டாக்டர் போல் ஜோசப் அவர்கள் செய்திருந்தார். அத்துடன் அவரே விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்

அன்று வெளியிடப்பெற்ற நூல்களான ‘இணைய ஆற்றுப்படை’ ‘இசைத் தமிழ் கலைஞர்கள். மற்றும் மணல் மேட்டு மழலைகள் ஆகிய நூல்களின் பிரதிகள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



‘உதயன்’ லோகேந்திரலிங்கம் அவர்களும் அவருடன் இணைந்து ஏற்பாடுகளைக் கவனித்திருந்தார்.கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவி பேராசிரியை திருமதி செல்வநாயகி ரீதாஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

முதலில் வாழ்த்துரைகள் மற்றும் விமர்சன உரைகள் ஆகியன இடம்பெற்றன. கனடா கவிஞர்கள் கழகம் - கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் ஆகிய இலக்கிய அமைப்புக்களின் சார்பிலும் அவற்றின் தலைவர்கள் உரையாற்றினர். கவிஞர்கள் கழகத்தின் சார்பில் திரு குமரகுரு உரையாற்றினார். தொடர்ந்து நூலின் பிரதிகள் சபையோருக்கு வழங்கப்பெற்றன.
அடுத்து பதிலுரையாற்றிய புதுச்சேரி பேராசிரியர் மு. இளங்கோவன் அவர்கள் தனது உரையில் பின்வருமாறு உணர்வுடன் பகிர்ந்து கொண்டார்.



“எனக்கு ஈழத்தமிழர்களின் மீது கடநத பல வருடங்களாக நட்பும் தொடர்பும் உண்டு. அதற்கு மேலாக கிழக்கு மாகாணத் தமிழர்களோடு கொண்ட தொடர்பினால் விபுலானந்த அடிகள் தொடர்பான சாதனைகளையும் அறிவையும் ஆற்றலையும் மதித்து இன்றும் அவரின் புகழ்பாடும் ஒருவராக நான் இன்று இருந்து வருவதற்கு காரணம் எனக்கு கிட்டிய கிழக்கிலங்கைத் தோழர்கள் என்றால் அது மிகையாகாது. விபுலானந்த அடிகளாரின் வரலாறு தொடர்பான ஆவணப் படத்தை தயாரிப்பதற்கும் எனக்கு கனடா வாழ் அன்பர்கள் பலர் உதவி செய்தார்கள். அந்தப் பணியை நான் தொடர்ச்சியாகச் செய்வதற்கு உலகின் பல நாடுகளிலும் உள்ள ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வருகின்றார்கள்” என்றார்..







# மக்கள் நலன்களுக்காக அன்றி தத்தமது சுயநலன்களை ஈடு செய்வதற்காகவே சங்கு ஊதுகின்றனர்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டு!

ஈபிடிபி கட்சிக்கு ஒரு கொள்கை உள்ளது. அதனை வெற்றி கொள்வதற்கான நேர்த்தியான வேலைத்திட்டங்களை நெறிப்படுத்தியே உரிய பொறிமுறையுடன் தனது பயணத்தை தொடர்கின்றது என சுட்டிக்காட்டிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஒற்றுமை ஐக்கியம் என பேசிக்கொண்டிருப்பவர்கள் இன்று தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்து தமது சுயநலன்களுக்காக சங்கை ஊதிக்கொண்டு திரிகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமையன்று (14.10.2024) கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. அக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழர்களின் பிரதிநிதிகள் தாம் தான் என மார்தட்டிய கூட்டத்தினர் இன்று தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழரசு கட்சி, சுயேட்சை என திசைக்கொன்றாக பிரிந்து தமது சுயநலன்களை ஈடுசெய்வதற்காக தேர்தலில் போட்டிபோடுகின்றார்கள்.
இதேநேரம் தமிழரசு கட்சி என கூறிக்கொண்டு இருப்பவர்களும் இரண்டு அணியாக பிரிந்து செயல்படுகின்றார்கள்.

ஜனநாயகத்தில் கருத்து சுதந்திரம் இருக்க வேண்டும். அதுதான் அடிப்படை ஆனால் இங்கு நல்ல நோக்கத்திற்காக அந்த சுதந்திரத்தினை பயன்படுத்தாமல் அவர்கள் தத்தமது சுயலாபத்திற்காக பயன்படுத்துகின்றார்கள்.

அதனைவிட தமிழரசு கட்சியில் இருந்து பிரிந்தவர்கள் இன்று சங்கை ஊதிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.
இன்னொருபுறம் 13.10.2024) அன்று நடைபெற்ற தமிழரசு கட்சியின் கலந்துரையாடலில் சங்கு சின்னத்தை கொண்டுவாறவர்கள் கொலை, கொள்ளை, வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் எனவும் அதனாலே நாம் அவர்களை வெளியில் துரத்தி விட்டுள்ளோம் எனவும் கூறியுள்ளார்கள். ஆனால் அது உண்மை அல்ல. மாறாக சுயலாபத்திற்காகவே இவ்வாறு கூறியுள்ளார்கள்.

ஏனெனில் இவ்வாறு இன்று குற்றம் சுமத்தப்படும் அவர்களின் உண்மை நிலையை அன்று இவர்கள் தெரிந்திருக்கவில்லையா?
ஆனால் ஈபிடிபி அவ்வாறு அல்ல. ஈபிடிபி அதில் இருந்து மாறுபட்டது.

ஈபிடிபி யதார்த்தமான கொள்கையை முன்வைத்து அதனை அடைவதற்கான வேலைத்திட்டங்களை நீண்டகாலமாக முன்னெடுத்து வருகின்றது. இன்றும் அதை நோக்கியே செயற்பட்டு வருகின்றது.

இதேநேரம் ஈபிடிபிக்கு பேரம்பேசும் சக்தியாக போதிய ஆசனங்களை மக்கள் வழங்கியிருக்கவில்லை. போதிய ஆசனங்கள் இருக்குமாக இருந்தால் மக்களுடைய அபிவிருத்திக்கான, அரசியல் உரிமைக்கான தீர்வு என மூன்று வகையான பிரச்சினைகளையும் எம்மால் தீர்க்க முடியும்.

இதேநேரம் இம்முறை எமக்கு 5 ஆசனங்கள் கிடைக்க வேண்டும் என நான் எதிர்பார்கின்றேன். அவ்வாறு கிடைத்தால் இரண்டு வருடத்திற்குள் பிரச்சினைகளை எம்மால் தீர்க்கமுடியும்.
எமது கொள்கையை எற்றும் நாம் முன்னெடுக்கும் வழிமுறையை ஏற்றும் மக்கள் அணிதிரண்டு எம்முடன் பயணிக்கவேண்டும் என்றே அழைப்பு விடுக்கின்றெனே தவிர வாக்குகளை அபகரிக்க நான் இவற்றை முன்வைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டம் ஒரு ஆசனத்தை இழப்பதற்கு

09 பக்கம் தொடர்ச்சி...

# தமிழ் அரசியல்வாதிகளே காரணமாக உள்ளார்களா?

இவ்வாறு வடக்கு,கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவ ஆசனங்கள் குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில் அதனைப்பற்றி கொஞ்சம் கூட அக்கறையோ கவலையோ ,அதன் விளைவாக ஏற்படப்போகும் ஆபத்துக்களை அறிந்து கொள்ளும் அறிவோ இன்றி வழக்கம் போலவே ஒற்றுமை விடயத்தில் "சபிக்கப்பட்ட", கழுத்தறுப்பு அரசியல், குழிபறிப்பு அரசியலில் யாருமே நிகராக நிற்க முடியாத " தமிழ் தேசியக் கட்சிகள்" நீயா,நானா" தலைக்கனப் போட்டியிலும் ,வீடா,குத்துவிளக்கா,சங்கா என்ற தேர்தல் சின்ன கயிறுழுப்புக்களிலும் ஈடுபட்டு தமக்குள் முட்டி மோதி தமிழர் அரசியலை பலவீனப்படுத்தி வருகின்றன.

அது மட்டுமன்றி தமிழ் தேசியக்கட்சிகளின் தாய்க்கட்சி என தம்மைத்தாமே அழைத்துக்கொள்ளும் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் "தாழம்பூ நாகம்"போன்று இருக்கும் ஒரு சில படித்த மேதாவிகள் அந்தக்கட்சியை அழித்தே தீருவோம் எனக் கங்கணம் கட்டி தமது அல்லக்கைகளையும் செம்புதூக்கிகளையும் வேட்பாளர்களாக நிறுத்துவதற்காக கட்சிக்குள் தமிழ் தேசிய உணர்வுடன் செயற்படுவோரை,தமது தலைவர் பதவிக் கனவுக்கு தடையாக இருப்போரை கட்சியை விட்டு வெளியேற்றும் "உள்வீட்டு "சதியை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

மறுபுறமாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் , தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகித்து வெவ்வேறு காலகட்டங்களில் விலகிச்சென்ற கட்சிகளை மீண்டும் த ங்களுடன் இணைந்து தேர்தலுக்கு முகம்கொடுக்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். தமிழரசுக்கட்சியின் பெயரிலும் அதன் சின்னமான வீட்டிலும் தான் நாங்கள் கடந்தகாலங்களில் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். அவ்வாறே இந்த தேர்தலிலும் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.அந்த அழைப்பை ஏற்று வந்தால் மிகவிரைவாக நாங்கள் பேச்சுவார்த்தை மூலம் வேட்பாளர்களை நிறுத்தும் விடயங்களை இணைந்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்போம். அடுத்துவரும் ஒருசில நாட்களில் அவர்களின் பதிலை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.அவ்வாறு இணங்கி வராவிட்டால் தமிழரசுக்கட்சி தனித்து போட்டியிடும் என்று அறிவித்துள்ளார்

ஆனால் இந்த அழைப்பை உடனடியாகவே ரெலோ தலைவரான செல்வம் அடைக்கலநாதன் ,புளொட் தலைவரான சித்தார்த்ததன் .ஈ.பி.ஆர். எல்.எப். தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நிராகரித்துள்ளனர், அத்துடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறி ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற பெயரில் இயங்கும் இவர்களின் சின்னமாக "குத்து விளக்கு"இருந்தாலும் அண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக களமிறங்கிய அரியநேத்திரனின் தேர்தல் சின்னமான "சங்கு "தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளதால் அந்த சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத்தமிழரசுக்கட்சியும்ஜனநாயகதமிழ்தேசிய கூட்டணியும் தனித்தனியே களமிறங்கவுள்ளதாலும் அதேபோன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ,விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, டக்ளஸ் தேவனாநந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி,விஜயகலா மகேஸ்வரனை பிரதம வேட்பாளராக கொண்டு ஐ.தே.க.வும் களமிறங்கவுள்ள நிலையில் அங்கஜன் இராமநாதன் ஐக்கிய மக்கள் சக்தியில் களமிறங்க பேச்சுக்கள் இடம் பெற்றுவருகின்றன. அதேவேளை இம்முறை வடக்கில் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் ஒரு ஆசனத்தை கைப்பற்றும் என எதிர்வு கூறப்படுகின்றது.

எனவே நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகளுக்கிடையிலான பிளவுகள், யாழ் மாவட்டத்திற்கான ஒரு பாராளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டமை, அதனால் ஒரு வேட்பாளர் வெற்றி பெற பெற்றுக்கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை , தமிழ் மக்களிடையில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி, பிரபலமானவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியமை,வெற்றிபெறக் கூடியவர்களை வெளியேற்றி அல்லக்கைகளை வேட்பாளர்களாக நியமிக்க எடுக்கப்படும் முயற்சிகள்.இரா.சம்பந்தனின் மறைவு போன்ற அரசியல் கள சூழலினால் வடக்கு,கிழக்கில் தமிழ்ப் பாராளுமன்ற ஆசனங்கள் பறிபோய் தமிழ் தேசிய இனம் பலவீனப்பட்டுப் போவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

# சுதந்திரத்திற்குப் பின்னர் ஒரு நல்ல அரசாங்கம் தற்போது ஆட்சியை பொறுப்பேற்றுள்ள நிலையில் அதற்கு அபகீர்த்தி ஏற்படுத்த கலால் திணைக்களம் செயற்படுகின்றதா?

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஒரு நல்ல அரசாங்கம் தற்போது ஆட்சியை பொறுப்பேற்றுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் அந்த அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் கலால் திணைக்களம் செயற்பட்டு வருகின்றாதா என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் செல்லையா குமாரசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய அரசாங்கமானது ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக மதுவுக்கு எதிராக செயற்படுவதாக கூறியது. அவர்கள் கூறியது போலவே செய்யப்படும்போது அதற்கு கலால் திணைக்களம் முட்டுக்கட்டையாக இருந்து, பிரதேச செயலர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப் போவதாக ஒற்றைக்காலில் நிற்கிறது. அதனால் பிரதேச செயலர்கள், வழக்குக்குள் சிக்கினால் தங்களுக்கு பிரச்சினை என பயப்படுகின்றார்கள்.
உடனடியாக இடமாற்றம் கிடைத்துள்ள கலால் வரி திணைக்கள ஆணையாளர் இடமாற்றத்தில் செல்லாமல், மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்குமாறு கோரி பிரதேச செயலர்களை எச்சரிப்பதாகவும் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் செயலாளர் செல்லையா குமாரசிங்கம் தெரிவித்துள்ளார்.

07-10-2024 அன்றையதினம் சங்கானையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சங்கானையில் புதிதாக ஒரு மதுபான சாலையை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டது. இந்த விடயம் எமக்குத் தெரியவந்த நிலையில் கடந்த மூன்றாம் திகதி சர்வதேச நல்லொழுக்க தினத்தன்று சங்கானை பிரதேச பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தோம்.

இது இவ்வாறு இருக்கையில் கொழும்பு மதுவரித்திணைக்கள ஆணையாளர் இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களான சங்கானை, கோப்பாய், தெல்லிப்பழை, கரவெட்டி மற்றும் நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு ஒரு கடிதத்தினை அனுப்பியுள்ளார். குறித்த மதுபானசாலைகளுக்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டும், அல்லது உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலர்களுக்கு கடிதம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த கடிதம் தனி சிங்களத்திலேயே அனுப்பி வைக்கப்பட்டது.
கலால் திணைக்கள ஆணையாளருக்கு இடமாற்றம் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் அவர் அந்த பதவியை விட்டு போகின்றார் இல்லை. எனவே உடனடியாக கலால் திணைக்கள ஆணையாளரின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தி, இவ்வாறான மதுபானசாலை அனுமதிப் பத்திரங்களை ரத்துச் செய்ய வேண்டும்.



ஜனாதிபதியின் அறிவித்தல்களுக்கு ஏற்ப செயற்படுவதா, கலால் திணைக்களத்தின் அறிவிப்புக்கு ஏற்ப செயற்படுவதா, மக்களின் குரலுக்கு செவி சாய்ப்பதா என பிரதேச செயலர்கள் குழப்பத்தில் உள்ளார்கள். மதுபான சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்யுமாறு ஜனாதிபதி விடுத்த அறிவிப்பானது, பிரதேச செயலர்களுக்கு எழுத்து வடிவில் கிடைக்கப்பெறுமானால் அவர்கள் அதற்கேற்ப செயற்பட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்காமல் இருக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.




# GRAND OPENING CEREMONY OF 'BEHIND ME' MEDIA GROUP 'S STUDIO IN MISSISSAUGA

## கனடா -மிசிசாகா நகரில் இடம் பெற்ற 'BEHIND ME' MEDIA GROUP நிறுவனத்தின் கலையகத்தின் திறப்பு விழா.

கடந்த 7ம் திகதி திங்கட்கிழமையன்று கனடா மிசிசாகா நகரில் இடம் பெற்ற 'டீநுஉஜனே ஆநு' ஆநுனுஜயு புசுழுரீ நிறுவனத்தின் கலையகத்தின் திறப்பு விழா சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிறுவனத்தின் தலைவரும் KT GROUP OF COMPANIES வர்த்தக நிறுவனத்தின் தலைவருமான கனேந்திரன் செல்வராஜா அவர்களும் அவரது பாரியார் திவ்யா கனேந்திரன் அவர்களும் தமது பணியாளர்கள் மற்றும் குழுவினருடன் இணைந்து மேற்படி கலையகத்தை அழகிய முறையிலும் வசதிகள் கொண்டதுமான வகையில் அமைத்திருந்தார்கள்.

அன்றைய நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் கவிஞரும். தற்போது கனடாவிற்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்ட வருகை தந்திருப்பவருமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அனைவரும் வரவேற்கப் பின்னர் 'BEHIND ME' MEDIA GROUP நிறுவனத்தின் கலையகத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் வைபவம் இடம்பெற்றது. கலையகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தவர்கள் திருமதி கனேந்திரன் .திவ்யா, திரு. லோகேந்திரலிங்கம் மற்றும் திரு அம்பலவாணர் சிவபாலசுந்தரம் ஆகியோர்.

தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் நிறுவனத்தின் தலைவர் கனேந்திரன் செல்வராஜா அவர்கள் தலைமை உரையாற்றினார்.

அவர் தனது உரையில்

"வெவ்வேறான சில வர்த்தக முயற்சிகளில் முவு புசுழுரீ ழுகு ஊழுஆீயுஜேஐநுளு என்னும் பெயரோடு வர்த்தகத்துறையில் கடந்த 12 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டு வரும் நாம் தற்போது ஊடகத்துறையின் அவசியம் பற்றி நன்கு அறிந்தும் தெரிந்தவர்களாக அனுபவ மிக்க பணியாளர்களோடு 'BEHIND ME' MEDIA GROUP நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம். எமது நோக்கம் எம்மோடு இணைந்து கொள்பவர்கள் அனைவரும் படிப்படியாக இந்த சமூகத்தின் தலைவர்களாக விளங்கவேண்டும் என்பதே.

மேலும் எமது 'BEHIND ME' MEDIA GROUP இற்கு இணையாக BEHIND ME' சேவை மற்றும் உதவிகள் வழங்கும் நிறுவனத்தையும் நிறுவியுள்ளோம். இந்த நிறுவனமானது உலகில் எங்கெங்கு வசதிகள் குறைந்தவர்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றதோ அங்கெல்லாம் எமது நிறுவனங்களின் உதவிகள் சென்றடைய வேண்டும் என்பதே ஆகும். எமது BEHIND ME' ஊடக நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தும் எமது சேவை வழங்கும் நிறுவனத்தின் ஊடாக உதவிகள் மற்றும் சேவைகள் தேவைப்படும் இடங்களுக்கு அல்லது மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேலும் எமக்கான பணிகளுக்குரிய முக்கியத்துவத்தை நாமே வழங்கவேண்டும். எமக்கு அடுத்ததாகவே நாம் மற்றவர்களை எதிர்பார்க்கலாம். எனவே எம்மோடு ஒத்துழைக்கின்ற அனைவரும் இந்த கோட்பாட்டைக் கடைப்பிடித்தால் நாம் அனைவரும் ஒன்றாகவே முன்னேறலாம்.

மேலும். இன்றைய சிறப்பு வைபவத்தில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டுள்ள கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களும் எம்மோடு இணைந்திருப்பது எமக்கு உற்சாகத்தைத் தருகின்றது.

கனடாவில் முப்பது வருடங்களுக்கு மேலான எழுத்துத்துறை மற்றும் ஊடகத்துறை அனுப. வத்தைக் கொண்ட திரு லோகேந்திரலிங்கம் எமது இயக்குனர் சபையில் இணைந்திருப்பது எமக்கு புத்துணர்வைத் தருகின்றது' என்று தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு பலரும் உரையாற்றினார்கள். எல்லாமாக நான்கு மொழிகளில் இயங்கவுள்ள டீநுஉஜனே ஆநு' ஆநுனுஜயு புசுழுரீ நிறுவனத்தில் ஆங்கிலம். தமிழ். பஞ்சாபி. ஹிந்தி. ஆகிய மொழிகளில் பணியாற்றக் கூடியவர்கள் இணைந்துள்ளார்கள்.

ஏற்கெனவே ஒளிபரப்பாகி வரும் டீநுஉஜனே ஆநு' ஆநுனுஜயு புசுழுரீ யுரியுப் செனல்களில் செய்திகள் மற்றும் சினிமா விமர்சனங்கள் சமூக நிகழ்வுகள் ஆகியன ஒளிபரப்பாகி பல் மொழி சார்ந்த மக்களின் அபிமானத்தையும் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கு உரையாற்றிய அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்கள் தனது உரையின் போது" உலகில் மிகவும் பலம் வாய்ந்ததும் முக்கியமானதுமான ஊடகத் துறையில் கால் பதித்துள்ள டீநுஉஜனே ஆநு' ஆநுனுஜயு புசுழுரீ நிறுவனத்தை நான் வாழ்த்துவதோடு, பாராட்டியும் மகிழ்கின்றேன்.. எனது கனடிய விஜயத்தின் போது இந்த நிகழ்வும் என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு இடத்தைப் பெ ற்றுக்கொண்டது" என்றார்.

இங்கே காணப்படும் படங்கள் திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்டவையாகும்.














For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2


# தேசம்

NATION THE THESAM


EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX
REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED
ACE
Experts In The Local Market



Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment

Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
toronto.baskaran@gmail.com

Issue - 08 Once a Month OCTOBER 2024

## பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டம் ஒரு ஆசனத்தை இழப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகளே காரணமாக உள்ளார்களா?

பக்கம் 09





## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நிதி உதவிகளை வழங்கி நோயாளர்களின் தேவைகளுக்கு தீர்வு காண வழி சமைக்கும் கனடா வர்த்தகர் கனேசன் சுகுமார்

பக்கம்
15வ

## அரச அதிபர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்ட வேதநாயகன் இப்போது வடக்கின் ‘நாயகனாக’ காட்சி தருகின்றார்.

பக்கம் 14






## தமிழ் கனேடியர்களுக்கு எதிரான இலங்கையின் தலையீடு குறித்து ‘கனடா–தமிழர்களுக்கான உரிமைகள் குழு’ பரிந்துரைகளை வழங்கியது

பக்கம் 20